பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 07 வெள்ளிக்கிழமை (21-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:208

## உடன்படிக்கையை சரிவர அமுல் செய்த பிறகே பேச்சு!

### நாடாளுமன்றில் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்21

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்கள் அடுத்த சில வாரங்களில் ஆரம்பமாகும் எனக் கூறமுடியாது. விடுதலைப் புலிகளின் தலைவருடன் செய்துகொண்ட உடன்படிக்கையை முறைப்படி அமுல்செய்த பின்பே பேச்சு குறித்து முடிவு செய்யப்படும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுல்செய்ய எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் அவர் விளக்கிக் கூறினார்.

இனப்பிரச்சினைக்கு தனிநாடு தீர்வாக அமையமாட்டாது. இதுவே அரசின் நிலைப்பாடாகும். சகல இன மக்களின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் வகையில் பிரச்சினைக்குத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## விமானத்தின் பாகங்கள் மீட்பு!

கொழும்பு,ஜூன்21

நாட்டிற்குள் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட விமானம் ஒன்றின பாகங்களை சுங்கப் பிரிவினர் கண்டுபிடித்திருக்கின்றனர். அவை இரண்டு கொள்கலன்களில் துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

சுங்கப்பகுதியினரும் சி.ஐ.டி. பொலீஸாரும் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டிருக்கின்றனர். இவ்விசாரணைக்கு சர்வதேச பொலீஸாரின் உதவியும் கோரப்படவிருக்கிறது.

விமானத்தின் பாகங்களிலும் அது தொடர்பான பத்திரங்களிலும் ரஷ்ய மொழியே காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மடு ஆலயத்துக்கான வீதி நேற்று திறக்கப்பட்டது!

வவுனியா,ஜூன்21

மதவாச்சி - மன்னார் வீதியில் மடுத் தேவாலயத்துக்குச் செல்லும் மடு வீதி நேற்றுமுற்பகல் 11.30 மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா, வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் ஆகியோர் கூட்டாக நாடாவை வெட்டி பாதையைத் திறந்து வைத்தனர்.

இந்தப் பாதை திறக்கப்பட்டதை அடுத்து மூன்று அமைச்சர்களும் மடுத தேவாலயத்துக்கு சென்று வழிபாட்டில் கலந்துகொண்டனர்.

அடுத்த மாதம் 2 ஆம் திகதியும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதியும் இடம்பெறவிருக்கும் மருத்தேவாலய உற்சவத்தில் பங்குபற்றும் பக்தர்களுக்கு தேவையான வசதிகளை வழங்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அமைச்சர்கள் அங்கு ஆராய்ந்தனர்.

இந்தப் பாதையை 24 மணி நேரமும் திறக்க விடுதலைப் புலிகள் சம்

(12ஆம் பக்கம் பார்க்க)

# கண்டி வீதி வழியே விரைவில் படையினரும் போக்குவரத்து!

## யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் ஆரம்பிக்க நிலையியற் குழு அங்கீகாரம்

யாழ்ப்பாணம்,ஜூன்21

யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை ஆரம்பிக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் நிலையியற்குழு நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தப் பீடத்தில் மின்சாரமும் மின்னியலும், தகவல் தொழில்நுட்பமும் தொடர்பாடலும், பொதுக் கற்கை நெறி ஆகிய துறைகள் ஆரம்பிக்கப்படும்.

இந்தப் பீடத்துக்கான ஆளணியினரைத் தெரிவு செய்தல் உட்பட ஏனைய பணிகளை பல்கலைக்கழக நிர்வாகம் ஆரம்பிக்கவிருக்கின்றது.

புதிய பீடத்துக்கு மாணவர்கள் அடுத்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் அனுமதிக்கப்படுவர்.

இந்தப் பீடத்துக்கான பாடவிதானம் உட்பட விரிவான அறிக்கையை லண்டன் கேம்பிரிஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர்களான அமரதுங்க, மில்னி ஆகியோரின் அனுசரணையுடன் இங்கிலாந்தில் வசிக்கும் தெல்லிப் பழையைச் சேர்ந்த பொறியியல் வல்லுநர் பிபரதன் தயாரித்து வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## பயண ஏற்பாட்டு திட்டத்தை புலிகளிடம் அரசு சமர்ப்பிக்கும்

கொழும்பு,ஜூன்21

**பொதுமக்கள் போக்குவரத்துக்காகத் திறக்கப்பட்டிருக்கும் ஏ-9 கண்டி வீதியைப் படையினரும் பயன்படுத்த அனுமதிக்குமாறு விடுதலைப் புலிகளிடம் அரசு முறைப்படி கோரவுள்ளது.**

**படையினர் அந்த வீதியைப் பயன்படுத்துவது தொடர்பான திட்டம் ஒன்றை அரசு வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுவின் ஊடாக விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.**

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி ஒரு தரப்பைச் சேர்ந்தவர்கள் எவரும் மறுதரப்பாரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் ஆயுதங்கள் மற்றும் சீருடையின்றி பிரவேசிக்க முடியும். தற்போது இந்த வசதியை விடுதலைப் புலிகள் மட்டுமே பயன்படுத்திவருகிறார்கள் என்று அரசாங்க வட்டாரங்கள் சுட்டிக்காட்டி இருக்கின்றன. வடக்கு - கிழக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதுபோல இன்னமும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் படையினர் பிரவே

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர்களை மீட்டதாக 'யுனிசெவ்' அறிவிப்பு

கொழும்பு,ஜூன்21

விடுதலைப் புலிகளின் வசம் இருந்த சுமார் 60 சிறுவர்களைத் தாங்கள் மீட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நலநிதியமான 'யுனிசெவ்' தெரிவித்துள்ளது.

'யுனிசெவ்' நிறுவன அதிகாரிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்து அவர்கள் வசம் இருந்த இந்தச் சிறுவர்கள் மீட்கப்பட்டனர்.

வன்னிப் பிரதேசத்தில் இருந்து மீட்கப்பட்ட இவர்கள் புலிகளிடம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பங்களை வெளியேற உத்தரவு

தென்மராட்சி,ஜூன்21

சாவகச்சேரி சிவன் கோயிலடிப் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களை அங்கிருந்து வெளியேறுமாறு படையினர் அறிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இப்பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள 30க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதனால் வெளியேற வேண்டிய நிலையில் உள்ளனர்.

நுணாவில் கிழக்கிலிருந்து வயல் வெளி ஊடாக மறவன்புலோவுக்கு மணல்பாதை அமைக்கப்பட்ட பின்னர் இப்பகுதியில் முகாமிடுவதற்காகவே குடியிருப்பாளர்களை வெளியேறுமாறு படையினர் அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது. (ஐ-117)

## நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் தடையேதுமில்லை; தாமதம் மட்டுமே!

### பத்திரிகையாளர் மாநாட்டில் பீரிஸ்

கொழும்பு,ஜூன்21

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆரம்பமாகவுள்ள பேச்சுக்கள் தொடர்ந்து தாமதப்படுத்தப்பட்டு வந்தாலும் புலிகளுடனான சமாதான நடவடிக்கைகள் சிக்கலில் இருப்பதாக வெளியான செய்திகளை அரசு மறுத்துள்ளது.

பேச்சுக்களை ஆரம்பிப்பதில் சிறு தாமதம் மட்டுமே ஏற்பட்டிருப்பதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். பேச்சு ஆரம்பமாவதற்கு முன்பு எஞ்சியுள்ள சில பிரச்சினைகள் பற்றிப் புலிகளுடன் பேசித் தீர்வு காணவேண்டும் எனவும் இந்தத் தாமதம் குறித்துத் தான் அவ்வளவாகக் கவலைப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்கான பத்திரிகையாளர் மாநாட்டில் நேற்று இவற்றைத் தெரிவித்தார்.

அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியதாவது:-

பேச்சுக்கான திகதி பற்றிப் பேசிக் கொண்டே இருப்பது, அது பற்றிப் பிரஸ்தாபிப்பது என்பன சிறுபிள்ளைதனமானது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை முற்றுமுழுதாக நிறைவேற்றுவதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். மேலும் சிறுசிறு பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றை உரிய முறையில் தீர்த்து வைத்தபின் பேச்சுக்களுக்கான பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும்.

பேச்சுக்களில் தாமதங்கள் ஏற்படுவதாகச் சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் சமாதான செயலக

(12ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி



...பேச்சுப் பற்றிப் பேசிப் பேசியே காலம் போச்சு எண்டு சொல்லுங்கோ...

## 2000 ஆம் ஆண்டு சண்டையில் காணாமற்போன 4 படையினரின் எலும்புக்கூடுகள் கிழக்கு அரியாலையிலிருந்து மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்21

கிழக்கு அரியாலைப் பகுதியில் கடந்த 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற சண்டையின்போது காணாமற்போன இராணுவச் சிப்பாய்கள் நால்வரின் சடலங்கள் அந்தப் பகுதியில் இருந்து நேற்று மீட்கப்பட்டன.

எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்ட சடலங்களுடன் அழிவடையாது காணப்பட்ட தடயப் பொருள்கள் மூலம் அவை உடனடியாகவே அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.

கிழக்கு அரியாலைப் பகுதியில் கடந்த 2000ஆம் ஆண்டு மேமாதம் 10ஆம் திகதி இவர்கள் நால்வரும் காணாமற்போனதாகக் கூறப்படுகிறது. நேற்று அப்பகுதியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட படையினர் நான்கு எலும்புக்கூடுகளைக் கண்டுபிடித்தனர்.

யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவுக்கும், பொலீஸாருக்கும் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து அவ்விடத்துக்குச் சென்ற நீதிவான் எலும்புக்கூடுகளைப் பார்வையிட்டார். விசாரணைகளையும் மேற்கொண்டார்.

எலும்புக்கூடுகளுடன் காணப்பட்ட தடயப் பொருள்களை வைத்து ஒவ்வொரு எலும்புக்கூடும் அடையாளம் காணப்பட்டது.

இராணுவ அடையாள அட்டையுடன் காணப்பட்ட முதலாவது எலும்புக்கூடு பி.எம்.எஸ்.எஸ்.பத்திராஜ

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஞாயிறு, போயா தினங்களில் கடைகளை மூட இணக்கம்

## நேற்றைய கலந்துரையாடலில் முடிவு

யாழ்ப்பாணம்,ஜுன்21

ஞாயிறு மற்றும் அரச, வர்த்தக வங்கி விடுமுறை (போயா) தினங்களில் வியாபார ஸ்தாபனங்களை முழுமையாக மூட வர்த்தகர்கள் இணக்கம் கண்டுள்ளனர்.

நேற்று யாழ்.வணிகர் கழகங்கள் யாழ்ப்பாண வர்த்தகர்களுடன் ஏற்பாடு செய்த விசேட கலந்துரையாடலிலே இந்த ஏகோபித்த முடிவு எடுக்கப்பட்டது.

இது சம்பந்தமாக யாழ்.வணிகர் கழகம் அறிக்கை ஒன்றினை விடுத்துள்ளது.

இந்தத் தீர்மானத்தை அனைத்து வர்த்தகர்களும் செம்மையாகக் கடைப்பிடித்து பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும். விடுதலைப் புலிகள், அரச நிர்வாகம், தொழில் ஆணையாளர் திணைக்களம் ஆகியதரப்புகளும் இந்த முடிவை ஒழுங்கான முறையில் அமுல்ப்படுத்தும்படி கேட்டுள்ளன.

எதிர்வரும் ஞாயிறு முதல் அமுலுக்கு வரும் இந்தத் தீர்மானத்தை மீறும் வர்த்தகர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு யாழ்.வணிகர் கழகம் ஒரு போதும் பொறுப்பேற்காது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

# திருமலையிலிருந்து மா தரை வழியாக வருகிறது

யாழ்மாவட்ட விவசாய, உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் திருகோணமலையில் இருந்து கோதுமை மாவை தரைப்பாதையூடாக ஏற்றி வரும் பணிகளை ஆரம்பித்திருப்பதாக சமாசத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

திருகோணமலை பிறிமா ஆலையில் இருந்து இதுவரை காலமும் கப்பல் மூலமே கோதுமை மாவு சமாசத்தினால் எடுத்து வரப்பட்டது.

தற்போது ஏ-9 பாதையூடாக லொறிகள் மூலம் கோதுமை மாவை சமாசம் தருவித்து பல நோக்குக் கூட்டுறவும் சங்கங்களுக்கு விநியோகித்து வருகின்றது. (ஐ-17)

# ஆசிரிய சங்கத்துடனான சந்திப்பை கல்வியமைச்சர் ஒத்திவைத்தார்

## அடுத்த நடவடிக்கை குறித்து 26ஆம் திகதி ஆராய்வு

காரைதீவு,ஜுன்21

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துடனான சந்திப்பை கல்வியமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு நான்காவது தடவையாகவும் ஒத்தி வைத்தார். இச்சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெறவிருந்து சந்திப்பு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டிருப்பது சங்க அங்கத்தவர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது என்று பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

கல்வியமைச்சருடனான சந்திப்பு ஏற்கனவே ஏப்ரல் 9,ஏப்ரல்20, மே20 ஆகிய திகதிகளில் நடைபெறவிருந்து ஒத்திவைக்கப்பட்டது. கல்வியமைச்சருடனான சந்திப்பு இத் தடவை நடைபெறும் என்பதை எதிர்பார்த்து எதிர்வரும் 25ஆம் திகதி நடத்தத் திட்டமிட்டிருந்த போராட்டத்தை ஆசிரிய சங்கம் பின்தள்ளி வைத்திருந்தது.

ஆயினும், அமைச்சருடனான சந்திப்பு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டிருப்பதால் அடுத்த நடவடிக்கை குறித்து ஆராய சங்கத்தின் செயற்குழு எதிர்வரும் 26ஆம் திகதி கூடும் என்று செயலாளர் மகாசிவம் தெரிவித்தார். 30 அம்சக் கோரிக்கைகள் குறித்து சங்கம் அமைச்சருடன் பேச்சு நடத்த விருந்தது. (ஐ)

### ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்21

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் இன்று நடைபெற இருந்த நாடக விழாவும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பும் தவிர்க்க முடியாத காரணத்தால் அடுத்த மாதம 19 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ-ரி)

### மாவின் சில்லறை விலையை சமாசம் குறைத்தது

அரியாலை,ஜுன்21

கோதுமை மாவின் விலையை யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கிலோ ஒன்றிற்கு 50 சதத்தால் குறைந்துள்ளதாக சமாசக் தலைவர் தெரிவித்தார்.

முன்னர் 20 ரூபா 50 சதமாக விற்கப்பட்ட ஒரு கிலோ கோதுமை மா தற்போது 20 ரூபாவாக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை நிர்ணயத்தை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடைப்பிடித்து [illegible]ளர்களுக்கு மாவை [illegible]மாறு சமாசம் கேட்டுள்ளது. (ஐ-17)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜுன்21

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குவது தொடர்பாக இன்று கலந்துரையாடல் ஒன்று கடற்தொழிலாளர் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

### 'டெங்கு' ஆபத்து: றோயல், பௌத்த மகளிர் கல்லூரிகள் மூடப்பட்டன

கொழும்பு,ஜுன்21

டெங்கு நுளம்புகள் பரவியதை அடுத்து கொழும்பு றோயல் கல்லூரியும், பௌத்த மகளிர் கல்லூரியும் இன்று முதல் நான்கு நாள்களுக்குத் தற்காலிகமாக மூடப்படும். இதற்கான தீர்மானத்தை அரசாங்கம் மேற்கொண்டது. டெங்கு நுளம்புகள் ஒழிப்புக்கான விசேட பிரிவு இவ்விரு கல்லூரிகளிலும் பரிசோதனை நடத்தியது. (ஐ)

### சார்லி சப்ளின் திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம்,ஜுன்21

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு சார்லி சப்ளினின் 'மெடேன் ரைம்' (Medern time) மற்றும் திறீஸ்ரொகீஸ் (Three Stoogies) ஆகிய இரு திரைப் படங்கள் காண்பிக்கப்படவுள்ளன. (ஐ-6)

### கடற்படை முகாம் விஸ்தரிப்பு!

காரைநகர்,ஜுன்21

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்பாக உள்ள கட்டடத்தில் கடற்படையினர் முகாமிட்டு அதனை விஸ்தரித்து வருகின்றனர்.

இந்தக் கட்டடத்தில் முன்னர் கடற்படையினரின் சிவில் நிர்வாக அலுவலகம் இயங்கி வந்தது.

இதேவேளை -

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி வித்தியாலயத்தை சூழவுள்ள கடற்படை முகாமும் மண் அணைகள் புதிதாக அமைக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. (ஐ-73)

### கல்லூரி தினம்

யாழ்ப்பாணம்,ஜுன்21

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்லூரி தினம் இன்று மாலை 3.30 மணிக்கு கல்லூரி அதிபர் கலாநிதி தி.கமலநாதன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக மனிதவள அபிவிருத்தி மற்றும் கல்வி - கலாசார விவகார அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக மனிதவள அபிவிருத்தி மற்றும் கல்வி, கலாசார விவகார அமைச்சுச் செயலர் வி.கே. நாணயக்கார கலந்துகொள்வார். (ஐ-9)


ஜப்பான் தென்கொரியா

# உலகக் கிண்ண கால்பந்து

2002 FIFA WORLD CUP KOREA JAPAN

31.05.2002 - 30.06.2002





பிரேஸில் நட்சத்திரங்கள் றொனால்டோ (இடது), ரிவால்டோ (வலது) ஆகியோர் பயிற்சியின் போது தமது பயிற்சியாளருடன்....

# கால் இறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன

உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகளின் கால் இறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன. இன்றைய ஆட்டத்தில் பலமான இரு அணிகளான இங்கிலாந்தும் பிரேஸிலும் ஒரு ஆட்டத்திலும், ஜேர்மனி - அமெரிக்கா ஆகியன மற்றோர் ஆட்டத்திலும் பங்குகொள்கின்றன. முதலாவது ஆட்டம் ஜப்பானிலும் மற்றைய ஆட்டம் கொரியாவிலும் இடம்பெறும்.

இங்கிலாந்து - பிரேஸில் இடையிலான ஆட்டத்தில் எந்த அணி வெற்றி பெறும் என்பதை ஆரூடம் கூறமுடியாதுள்ளது. இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணி முதலில் கோல் அடித்தால் மட்டுமே வெற்றி பெறலாம் என்று கருத்துத் தெரிவித்துள்ளார் இங்கிலாந்தின் கணித அறிஞரான ஜான் ஹைற. பாஸ்கலின். முப்பரிமாணக் கோட்பாடு மற்றும் பாய்சனின் பகிர்மானக் கோட்பாடுகளின் மூலம் அவர் இந்த முடிவைக் கணித்துள்ளார். ஒருவேளை பிரேஸில் முதலில் கோல் அடித்தால இங்கிலாந்து வெற்றிபெற ஏழில் ஒரு பங்கு வாய்ப்பே இருக்கினறது என்கிறார் அவர்.

ஜேர்மனி - அமெரிக்கா இடையிலான ஆட்டத்தில், ஜேர்மனி வெற்றி பெறுவதற்கான சாத்தியங்கள் அதிகம் எனக் கூறப்படுகின்றது. ஆனாலும், அமெரிக்காவையும் குறைத்து மதிப்பிட முடியாது. பல திருப்பங்களைக் கண்ட இந்த உலகக் கிண்ணப்போட்டிகளில் எதையும் சரியாகக் கணிக்க முடியாது என்ற நிலையில், இறுதி முடிவுகள் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். இன்று மாலை முடிவு தெரிந்துவிடும். (ம)



இங்கிலாந்து அணித் தலைவர் டேவிட் பெஹ்காம் (இடது), மைக்கல் ஓவன் (மத்தி) மற்றும் மார்ட்டின் கியோன் ஆகியோர் பயிற்சியில்....

# உதைபந்தாட்டத் துளிகள்

சியோல்,ஜுன்21

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் கால் இறுதிக்கு முன்னேறியுள்ள தென்கொரிய கால்பந்து அணியின் சாதனையை அங்கீகரிக்கும் விதமாக, அணியில் உள்ள 10 வீரர்களுக்கு கட்டாய இராணுவப் பணியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அணியில் இடம்பெற்றுள்ள 23 பேரில் முக்கியமான 10பேருக்கு இந்த விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனினும் இவ் வீரர்கள் 4வார அடிப்படையில் ராணுவப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

இதுவரை கட்டாய இராணுவப் பணியினால் வெளிநாடுகளில் சென்று உதைபந்தாட்டப் பயிற்சி பெறுவது தென்கொரிய வீரர்களுக்கு முடியாத காரியமாக இருந்தது. தடை விலக்கப்பட்டுள்ளதை அடுத்து உதைபந்தாட்டத்தில் முன்னேற்றம் ஏற்பட இடமுண்டு என்கிறார் தென்கொரிய வீரர் ஒருவர்.

☆ ☆ ☆

இம்முறை போட்டிகளை நடத்தும் நாடுகளில் ஒன்றான தென்கொரியா போர்த்துக்கலுடன் நடந்த ஆட்டத்தில் வெற்றிபெற்று கால் இறுதிக்குத் தகுதி பெற்றதை அடுத்து ஆனந்தக் கூத்தாடிய தென்கொரிய ரசிகர்கள் 30லட்சம் (3மில்லியன்) பேர் வீதிகளில் இறங்கி தமது மகிழ்ச்சியை ஆடிப் பாடி வெளிப்படுத்தினர். அதேசமயம் முதல்சுற்றில் - முதலாவது ஆட்டத்தில் - கோல் அடித்த வீரர்களுக்கு ஆட்டம் நடைபெற்ற பூசன் நகரில் சிலைகள் நிறுவப்படவுள்ளன.

☆ ☆ ☆

இம்முறை உலகக் கிண்ணப் போட்டியில் ஆடும் வீரர்களில் அனேகமானோர் தமது தலைமுடியை ஒவ்வொரு விதமாக அழகுபடுத்தியுள்ளனர்.

இங்கிலாந்து அணித் தலைவர் பெஹ்காமும் தனது தலைமுடியை ஒரு விதமாக அழகுபடுத்தியுள்ளார். ஆனால் டென்மார்க்குடன் நடந்த ஆட்டத்தின்போது மழையில் நனைந்தபடியே அவர் ஆடியதனால் அவரது தலையலங்காரம் கலைந்து விட்டது. அதனைத் திருத்துவதற்காக அவரது வழமையான தலையலங்கார நிபுணர் விமானம் மூலம் அவசரமாக ஜப்பானுக்கு வரவழைக்கப்பட்டார். இப்போது அவரது தலைமுடி சரிசெய்யப்பட்டுவிட்டது. (ம)

## இதுவரை அதிக கோல்கள் அடித்தோர்



றொனால்டோ (பிரேஸில்)
5 கோல்கள்.




கோல்ஸ் (ஜேர்மனி)
5 கோல்கள்.



ரிவால்டோ (பிரேஸில்)
4 கோல்கள்.




தொம்ஸன் (டென்மார்க்)
4 கோல்கள்.



டியோப் (செனகல்)
3 கோல்கள்.



ரவுல் (ஸ்பெயின்)
3 கோல்கள்.



மொறின்ட்ஸ் (ஸ்பெயின்)
3 கோல்கள்.

## தற்கொலைத் தாக்குதலுக்குப் பதிலடியாக

# மேற்குக்கரை நகரங்களுக்குள் இஸ்ரேல் இராணுவம் நுழைந்தது

லண்டன்,ஜூன்21

ஜெருசலேம் நகரில் பஸ் ஒன்றில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 20 பேர் பலியான சம்பவத்துக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேலிய இராணுவம் பலஸ்தீனர்கள் அதிகமாக வசிக்கும் மேற்குக்கரை நகரங்களுக்குள் புகுந்தது.

கடந்த இரண்டு நாள்களுக்குள் இஸ்ரேலியப் படைகள் இவ்வாறு நுழைவது இது இரண்டாவது தடவையாகும்.

டாங்கிகளும், கவசவாகனங்களும் பலஸ்தீன நகரங்களுக்குள் புகுந்துள்ளன. இவற்றுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் வகையில் வானத்தில் இஸ்ரேலிய விமானப் படைக் ஹெலிகொப்டர்கள் வட்டமிட்டபடி இருந்தன.

ஜெனின் அகதி முகாமுக்குள்ளும் இஸ்ரேல் இராணுவம் புகுந்துள்ளது. பெத்தலகேம் நகரைச் சேர்ந்த 3 பலஸ்தீனியர்களை வன்முறை நடவடிக்கைகளுக்காக இஸ்ரேல் கைது செய்துள்ளது. இதற்கிடையில் தற்கொலைத் தாக்குதல்களை நிறுத்துமாறு, பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் பலஸ்தீனத் தீவிரவாதிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

## சென்னை மேயர் பதவியில் இருந்து மு.க.ஸ்டாலின் விலக நேரிட்டது

சென்னை,ஜூன்21

சென்னை நகர மேயர் பதவியிலிருநது மு.க.ஸ்டாலின் விலக நேரிட்டுள்ளது.

நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றத்தில் உறுப்பினராகப் பதவி வகிக்கும் ஒருவர் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினராகப் பதவி வகிப்பதைத் தடைசெய்யும் சட்டம் தமிழக அரசால் கொண்டுவரப்பட்டதை அடுத்து சட்டமன்ற உறுப்பினராக மு.க. ஸ்டாலின், தான் ஏற்கனவே வகித்து வந்த சென்னை நகர மேயர் பதவியில் இருந்து விலக நேரிட்டுள்ளது.

இதேசமயம், மேற்படி சட்டம் செல்லுபடியற்றது என அறிவிக்கக்கோரி சட்டத்தரணி ஒருவர் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட சென்னை உயர் நீதிமன்றம் இது குறித்து விசாரணை முடியும் வரை சென்னை நகர மேயர் பதவிக்கான தேர்தலை நடத்தத் தடைவிதித்துள்ளது.

தி.மு.க.தலைவர் மு.கருணாநிதியின் மகனான மு.க.ஸ்டாலினை மேயர் பதவியில் இருந்து அகற்றவே புதிய சட்டத்தை அ.தி.மு.க. அரசு நடைமுறைப் படுத்தியதாக தி.மு.க.வினர் குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

## பாகிஸ்தானுக்கு ஹெலிகள் ரஷ்யா அனுப்பி வைத்தது!

இஸ்லாமாபாத்,ஜூன்21

பாகிஸ்தானுக்கு நான்கு இராணுவ ஹெலிகொப்டர்களை ரஷயா வழங்கியுள்ளது.

அண்மையில் கஜகஸ்தான் நாட்டில் உள்ள அல்மாட்டியில் ஆசியப் பாதுகாப்புக் குழுவின் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் ரஷ்ய அதிபர் விளாடிமிர்புடின் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் ஆகியோர் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்கள். அப்போதே இராணுவ ஹெலி கொப்டர்கள் வழங்குவது தொடாபாக இரு நாடுகளுக்குமிடையே ஒப்பந்தம் ஏற்பட்டது.

இதற்கமைவாக பாகிஸ்தானுக்கு 4 இராணுவ ஹெலிகொப்டர்களை ரஷ்யா அனுப்பிவைத்துள்ளது என பாகிஸ்தானிலிருந்து வெளிவரும் 'த நியூஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ரஷ்யா அனுப்பியுள்ள ஹெலிகொப்டர்கள் நவீன ரகமானவை என்ற போதிலும் எந்த வகையைச் சேர்ந்தவை என்பது அந்தச் செய்தியில் இடம்பெறவில்லை.

இந்தியாவின் நட்பு நாடான ரஷயா, பாகிஸ்தானுக்கு ஹெலிகொப்டர்களை வழங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

### சவூதி அரேபியாவில் குண்டுவெடிப்பு: பிரிட்டிஷ் பிரஜை பலி!

சவூதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் நேற்று இடம்பெற்ற கார்க் குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் பிரிட்டிஷ் பிரஜை ஒருவர் கொல்லப்பட்டார். (ஒ)

### வெள்ளப் பலி: சீனாவில் அதிகரிப்பு!

பிஜிங்,ஜூன்21

சீனாவில் கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் கடும் மழையினால் இதுவரை 500 பேர் பலியாகியுள்ளனர்.

ஜியான், ஹியுனான், ஜியாங்ஷி மாகாணங்களிலும், குவாங்ஷி மாநிலத்திலும் தொடர்ந்து கடும் மழை பெய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)




ஸ்பெயினில் வேலையற்றோருக்கு வழங்கப்பட்டுவந்த சலுகைகள் மற்றும் உதவிகளில் அந்நாட்டு அரசு மாற்றங்களை செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது எடுக்கப்பட்ட படம்.

## உல்லாசப் பயணிகள் வருகை இஸ்ரேலில் பெரும் வீழ்ச்சி

இஸ்ரேலில் நிலவி வரும் யுத்தச் சூழல் காரணமாக அந்நாட்டிற்கு வருகை தரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனையடுத்து உல்லாச பயணிகளை உற்சாகப் படுத்த இஸ்ரேலிய அரசு புதிய முறைகளைக் கையாண்டு வருகிறது.

குண்டுவீச்சு மற்றும் மனித வெடிகுண்டுகளின் தாக்குதல்களினால் அல்லாடிப் போயுள்ள இஸ்ரேலில் உல்லாசப் பயணிகளின் வருகை குறைந்துள்ளமையால், அவர்கள் மூலம் கிடைக்கும் வருமானமும் அரைவாசியாகிவிட்டது.

ஆபத்துக்களுக்கு அஞ்சாமல் - உயிரையும் துச்சமாக மதித்து தங்கள் நாட்டுக்குவரும் உல்லாசப் பயணிகளை இஸ்ரேலிய அரசு ரோஜா மலர் கொடுத்து வருவேற்கின்றது. அவர்கள் நாடு திரும்பும்போது 'இஸ்ரேல் உங்களை நேசிக்கிறது' என்று எழுதப்பட்ட ஸ்ரிக்கரை சட்டையில் ஒட்டுகிறார்கள். அத்தோடு 'நற்சான்றிதழ்' வேறு கொடுத்து அனுப்புகிறார்களாம். (-9)

## உதைபந்தாட்ட ஆர்வம் நோயாளிக்கு எமனானது!

தெஹ்ரான்,ஜூன்21

நோயாளிக்கு அருகில் இருக்க வேண்டிய மருத்துவ தாதி உலகக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியை தொலைக்காட்சியில் பார்க்கச் சென்றமையால் அந்த நோயாளி இறந்துவிட்டார்.

மேற்கு ஈரானில் இருந்து வெளி வரும் 'என்டிகாப்' என்ற பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

இலாம் நகரில் உள்ள மருத்துவ மனையில் நோயாளிக்கு அருகில் இருக்க வேண்டிய ஊழியர் - கடந்த ஞாயிற்றுக்கிழமை செனகல் - சுவீடன் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டத்தை தொலைக்காட்சியில் பாாக்கச் சென்று விட்டார். அப்போது நோயாளிக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. உடனடியாக தகுந்த சிகிச்சை கிடைக்காததால் அந்த நோயாளி இறந்துபோனார்.

'தமது தந்தையை சரியாகக் கவனிக்கவில்லை' எனக்கூறி இறந்தவரது பிள்ளைகள் மருத்துவமனை ஊழியர்களைத் தாக்கியதுடன், ஜன்னல் மற்றும் கதவுகளையும் அடித்து நொறுக்கியுள்ளனர். (ஒ-9)

உ

## நாரந்தனை - சரவணை கர்ணந்தோட்டம்

# ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

# மஹா கும்பாபிஷேகம்



**நிகழும் சித்திரபானு வருடம் ஆனி மாதம் 7 ஆம் நாள் இன்று (21-06-2002) வெள்ளிக்கிழமை காலை 9.30மணி முதல் 10.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள்பாலித்துள்ளது.**

பார்பூத்த பார்வதியின் மகனே போற்றி
பயன் பூத்த மறை சொன்ன முருகா போற்றி
தார்பூத்த கடம்பனியும் தோழா போற்றி
தவம்பூத்த தொண்டடியார் துணைவா போற்றி
நீர்பூத்த சரவணத்தில் பிறந்தாய் போற்றி
நிலைபூத்த நிதி சுகங்கள் தருவாய் போற்றி
சீர்பூத்த நாரந்தனை ~ சரவணை கர்ணந்தோட்ட
சிவசுப்பிரமணியரே போற்றி போற்றி

.- அருட்கவி சீ.விநாசித்தம்பி.

## உலகமுய்ய உதித்தனன்

நாரந்தனை சரவணைப் பகுதியில் கர்ணந் தோட்டப் பதியில் மிகத் தொன்மைமிக்கதும், பிரபல்யமானதுமான நாரந்தனைக் கந்தசுவாமி தேவஸ்தான கும்பாபிஷேக விழா நடைபெற உள்ளது. இது அனைவருக்கும் நன்மை தருவதும், மகிழ்ச்சிக்குரியதுமாகும். இக்கால சிரமங்களுக்கு மத்தியிலும், ஆலய மற்றும் தம் கிராம அபிமானமும் உடைய அடியார்களின் உதவியுடன், பரிபாலன சபையினர்கள் பெருமுயற்சிசெய்து ஆலயம் அழகுறப் புதுப்பித்துள்ளார்கள். இவ்விழாப் பொலிவு மூலம், அடியார்களுக்கும், சபையினர்களுக்கும் அனைவருக்கும் முருகப் பெருமான் திருவருளால் சகல நன்மைகளும் நிறைந்து வாழப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள்.
பிரதிஸ்டா பிரதம குரு,
முத்தமிழ்க் குருமணி, சிவாகம கலாநிதி,
கிரியா கிரமஜோதி,
(சுன்னாகம் கதிரைமலை சிவன் கோயில்)

## தீவகத்திலுள்ள ஆலயங்களுள் மிகவும் பழைமை வாய்ந்தது

நாரந்தனை - சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் தீவகத்தில் உள்ள ஆலயங்களில் மிகவும் பழைமை வாய்ந்தது. வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போதும் நமது முன்னோர்கள் கூறிச்சென்ற சில விவரங்களின் படியும் மற்றும் நமக்குக் கிடைத்த தகவல்களின் படியும் இவ்வாலயமானது இற்றைக்கு நூற்றுநாற்பது வருடங்களுக்கு முன்னதாக ஸ்தாபிக்கப்பட்டு நாரந்தனை - சரவணை என்று சொல்லப்படுகின்ற இரு கிராமங்களினால் பூசிக்கப்பட்டு வந்த பெருமையுடைத்து. மேலும் இத்திவ்விய தலத்தில்தான் முதல்முதல் தீவுப்பகுதியில் தேரோடிய தென்பதற்கும் பல சான்றுகள் பகருகின்றன.

காலத்துக்குக் காலம் இவ்வாலயத்தில் பல திருப்பணி வேலைகள் நடைபெற்று 1984ஆம் ஆண்டு நிகழப்பெற்ற மஹா கும்பாபிஷேகத்தையொட்டி ஆலயத்தில் நிறைவேற்றப்படாத பல நிர்மாணவேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு ஆலயம் முழுப்பொலிவுடன் திகழ்ந்துவரும் காலை 1991ஆம் ஆண்டு சித்திரைமாத இறுதியில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக மக்கள் தீவகத்தைவிட்டு இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்று குடியேறி இருந்தனர். மீண்டும் 5 வருடகால இடைவெளிக்குப் பின் தங்கள் சொந்த இடங்களுக்கு மீண்டும் 1996ஆம் ஆண்டு வந்து குடியேறத் தொடங்கினர். இக்காலப்பகுதியில் எமது ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூசை எதுவும் நடைபெறாது இருளடைந்திருந்தது. மீண்டும் 1997ஆம் ஆண்டில் எமது ஆலயத்தில் சம்புறோசன கும்பாபிஷேகம் நடைபெற்று நித்திய, நைமித்திய பூசை கிரமமாக நடைபெற்று வந்தது.

பின்பு 26.03.2001இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு ஆலயத்தின் மூலஸ்தான தூபி சண்டேஸ்வரர் ஆலயம் போன்ற பல நிர்மாண, திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு பல ஓவியங்கள் சமைக்கப்பெற்று வர்ண மை பூசப்பெற்று ஆலயத்தின் தோற்றம் முன்னிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளமைக்கு நாரந்தனை - சரவணை மக்களின் நிதியுதவியும், ஏனைய பங்களிப்புமே காரணம் என்று கூறின் மிகையாகாது.

சென்ற 17.06.2002 திங்கட்கிழமை தொடக்கம் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகத்துக்குரிய கிரியைகள் ஆரம்பமாகி மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சுன்னாகம் கதிரைமலைச் சிவன்கோயில் தேவஸ்தானத்தைச் சேர்ந்த முத்தமிழ் குருமணி, சிவாகம கலாநிதி, கிரியா கிரம ஜோதி நா.சர்வேஸ்வரக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து நடத்திவருவதுடன் இவ்வாலயத்துடன் தொடர்புடைய மூத்த குருக்கள் சிவாச்சார்யமணி நா.யோகேஸ்வரக் குருக்கள் உடனிருந்து நெறிப்படுத்திவந்தமை போற்றுதற்குரியது. இன்று (21.06.2002) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சிவசுப்பிரமணிய சுவாமிக்கு குடமுழுக்கென்று சொல்லப்படுகின்ற மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற எம்பெருமான் திருவருள் கூட்டியுள்ளார்.

க.நடராசா
தலைவர்,
ஆலய பரிபாலன சபையின் சார்பில்.

(5045)

## COMPUTER TYPE SETTERS

COMPUTER TYPE SETTERS தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். திறமைக்கும் அனுபவத்திற்கும் முன் உரிமை உண்டு. 01.07.2002ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல.1546, மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

(C/22588)

## சத்திய தரிசனம்

**சிற்பியின் சிறுகதைத்தொகுதி வெளியீட்டுவிழா**

**இடம்: கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி**

காலம்: நாளை (22.06.2002) சனிக்கிழமை

மு.ப.9.30 மணிக்கு

செங்கை ஆழியான், சு.வே.சிவா.., ...தொளி,
கோகிலா மகேந்திரன், கோப்பாய் சிவம், ஆறு..ருமுருகன்,
சிற்பி முதலியவர்களின் இலக்கியத் தேனை
இரசித்துப் பருக அனைவரும் வருக.

(4981) **யாழ்.இலக்கியவட்டம்.**

ஹறாக்றொஸ் HARCROS

The maharaja organisation limited Since 1939

## விற்பனைப் பிரதிநிதிகள்

**யாழ்ப்பாணம் வன்னி**
**முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு**

கமநல டிப்புளோமாவுடன் (Diploma in agriculture) கடினமாக
உழைக்கக் கூடிய திறமையும் ஊக்கமும் இருப்பின்,
இதோ உங்களுக்கான ஓர் அரிய சந்தர்ப்பம் காத்திருக்கிறது.
மகாராஜா கூட்ட நிறுவனங்களின் ஓர் அங்கமான
ஹரிசன்ஸ் கெமிக்கல் பிறைவேட் லிமிட்டெட்
விற்பனைப் பிரதிநிதிகளை வேண்டி நிற்கிறது.
உங்கள் சுய விபரக் கோவையுடன் இவ் விளம்பரம்
கண்டு 14 நாட்களுக்குள் இருவரின் சிபாரிசுகளுடன்
(Non related refrees) விண்ணப்பிக்கவும்.

பணிப்பாளர் - பொது முகாமையாளர்
ஹரிசன்ஸ் கெமிக்கல் பிறைவேட் லிமிட்டெட்
இல 07 பிறேபுருக் பிளேஸ்
கொழும்பு 02

Director- General Manager
Harrisons Chemical (Pvt) ltd
No 07 Braybrock Place
Colombo 02

மகாராஜாவின் கூட்டு நிறுவனம் (Member of Maharaja Organisation)

## இலங்கை மின்சார சபை
## யாழ்.பிரதேசம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

மின்மார்க்கங்களில் அவசர திருத்த வேலைகள் செய்ய வேண்டியுள்ளதால் 22.06.2002 சனிக்கிழமை காலை 9.00மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிவரையும் யாழ்ப்பாண குடாநாடு பூராகவும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

இதனால் ஏற்படும் சிரமங்களுக்காகவும் மனம் வருந்துகின்றோம்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம், சுன்னாகம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் இலங்கை மின்சார சபை."

(C/22594)

### படுகாயம்

யாழ்ப்பாணம்,ஜூன்21

நெல்லிமரத்திலேறிய சமயம் தவறிவீழ்ந்ததாகத் தெரிவித்து படுகாயமடைந்த நிலையில் சிறுவன் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த அசோக்வர்ணன் (வயது-9) என்ற சிறுவனே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளான். (எ-12)

### 'மானுடம்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூன்21

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகவியல் சமூகத்தின் 'மானுடம்' நூல் வெளியீடும் கலாநிதி என்.சண்முகலிங்கனின் 'மரபுகளும் மாற்றங்களும்' நூல் அறிமுகவிழாவும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

சமூகவியல் சமூகத் தலைவர் எஸ்.காயத்திரி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வாழ்த்துரைகளை துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், உயர்பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (ஒ-180)

### பதிவாளர் அலுவலகம் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூன்21

இதுவரை காலமும் செயலகத்தின் கீழ்த் தளத்தில் இயங்கிவந்த மாவட்ட பதிவாளர் அலுவலகம் இவ்வார இறுதியிலிருந்து செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இதன்காரணமாக இன்றும் எதிர்வரும் 25ஆம் திகதியும் பொதுமக்களுக்கான சேவைகள் எவையும் பதிவக அலுவலகத்தில் நடைபெற மாட்டாது எனவும் எதிர்வரும் 26ஆம் திகதிமுதல் வழமைபோல் புதிய கட்டடத்தில் அலுவலகம் இயங்கத் தொடங்கும் எனவும் மாவட்ட பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஐ-ரி)

### கலைக்கழக நாடகக் குழு உறுப்பினர் தெரிவு

கொழும்புத்துறை,ஜூன்21

மனிதவள அபிவிருத்தி கல்வி சுகாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கை கலைக் கழகத்தின் தமிழ் நாடகக்குழு உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுவுக்கு திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசியர் நீ.மரியசேவியர் அடிகளார், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டு கழகத் தலைவர் செல்லையா மெற்றாஸ்மயில ஆகியோர் யாழ். நகரிலிருந்து தெரிவாகியுள்ளனர்.

மற்றும் உறுப்பினர்களாக பேராசிரியர் மௌனகுரு, கலைச்செல்வன், கமலினி செல்வராஜன், மாத்தளை கார்த்திகேசு அன்ரனி ஜீவா, எம்.உதயகுமார், ஆர்.இராஜசேகரன், ஜெயசங்கர், கா.சிவபாலன், உடப்பூர் வீரசொககன், ச.பாலகுமாரன், எஸ்.தில்லைநடராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக கலாமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-ரி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 | 22 |
| 02 | 05 |
| 1917 | 2002 |

### திருமதி தெய்வானை சின்னையா

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்*
*வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"*

இன்று (21.06.2002) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு எமது அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம் சாந்தி' சாந்தி'' சாந்தி'''*

*செட்டியார்மடம்,*
*அராலி வடக்கு,*
*வட்டுக்கோட்டை.*

*எங்களை வாழவைத்த தெய்வத்தின் நினைவில்வாழும்:*
**குடும்பத்தினர்.**

(4994)

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 02 | 22 |
| 02 | 05 |
| 1930 | 2002 |

### அமரர் சிவகுரு செல்லத்துரை

*(ஓய்வுபெற்ற ஆசிரியர், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி)*

அப்பா! அப்பா!! அப்பா!!!
அன்போடு எமை அரவணைத்த அப்பாவே!
உங்கள் பிரிவால் வெலவெலத்து நிற்கின்றோமே!
அன்பின் உருவமே பண்பாய் எமை வளர்த்தீரே!
இன்று எமை பாதியில் தவிக்கவிட்டு நீர் மட்டும் சென்றீரே!
எத்தனை ஆண்டுகள்தான் சென்றாலும்
எம் இனிய அப்பாவே!
உம் நினைவுகள்தான் எம் நெஞ்சை விட்டு சென்றிடுமோ?

இன்று (21.06.2002) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் (மாகியம்பதி) நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி' சாந்தி'' சாந்தி'''

*மாகியம்பதி (சந்தி),*
*சண்டிலிப்பாய்.*

(5014)

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


## க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு

குடும்பமாக பரிசுகளை வெல்லுங்கள்
க்லோகாட் ரயிலுடன் இன்றே இணையுங்கள்



க்லோகாட் மூலம் உங்கள் குடும்பத்தினர் அனைவரும் பரிசுகளை வெல்ல இதோ ஓர் நல்ல சந்தர்ப்பம் நீங்கள் செய்ய வேண்டியது உங்கள் பெயர், முகவரி என்பவற்றுடன் ஏதாவதொரு க்லோகாட் பெட்டி ஒன்றையும் இணைத்து அனுப்ப மறக்க வேண்டாம். நீங்கள் பரிசு வெல்லும் அதே நேரத்தில் உங்கள் விற்பனையாளரும் பரிசு வெல்வார்.

**முதலாவது அதிர்ஷ்டமடையும் குடும்பத்திற்கு**
21'' கலர் தொலைக்காட்சி, கசட் பிளெயர், சலவை இயந்திரம், குளிர்சாதனப்பெட்டி என்பன பரிசுகளாகக் கிடைக்கும்.

**இரண்டாவதாக அதிர்ஷ்டமடையும் மூன்று குடும்பங்களுக்கு மூன்று பரிசுகள்**
21'' கலர் தொலைக்காட்சி, காஸ்குக்கர், பிளெண்டர், VCD பிளெயர் ஒன்று.

**விற்பனையாளர்களுக்கும் பரிசு**
அதிர்ஷ்டமடைந்த நான்கு குடும்பங்களின் விற்பனையாளர்களுக்கும் நான்கு டீப் ஃபிரிசர்கள்.

**ஆறுதல் பரிசுகள்**
100 ஆறுத[illegible]களாக ஹேமாஸ் சந்தைப்படுத்தல் வழங்கும் 100 பரிசுப் பொதிகள்

**முதலா[illegible] அனுப்பி வைப்போருக்கு**
முதல[illegible]வங்களை அனுப்பி வைப்போரில், 650 பெயர்களுக்கும் அவர்கள் [illegible]ருக்கும் அழகிய டிஷேட் ஒன்று.

உங்கள் விண்ணப்பப்படிவங்களை ஜூலை 19 ஆம் திகதி 2002 இக்கு முன் அனுப்பி வையுங்கள்

க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு – த.பெ.இல. 911 கொழும்பு.

க்லோகாட்

Masters DDB LN: C/38/2002

# உதயன்

## பாதுகாப்பு வலயம் என்ற கவசம்!

போரை நிறுத்தி, வடக்கு - கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதும், அங்குள்ள மக்கள் வருடக் கணக்காக அனுபவித்துவரும் கஷ்டங்களை நீக்குவதும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் நோக்கங்களில் முக்கியமானவை.

போர் தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால இயல்புநிலை இன்னும் முழுமையாக ஏற்படுத்தப் படவில்லை. மக்களின் கஷ்டங்களும் குறிப்பிடத்தக்க அளவில் நீக்கப்படவில்லை.

அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டு அவதிக்கு உள்ளாகியிருப்பவர்கள் வலிகாமம் வடக்கு மக்கள். 70ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் ஐந்து பேர் என்று வைத்துக் கொண்டாலும் மூன்றரை லட்சம் மக்கள் போக்கிடமும், தொழிலும், வருமானமுமின்றிக் கஷ்டப்படுகிறார்கள்.

போர் காரணமாக வீடுவாசல்களைவிட்டு வெளியேறி வேறுஇடங்களில் உற்றார், உறவினர்களுடனும், அகதிமுகாம்களிலும் இருந்து வருபவர்கள் இன்றுள்ள அமைதிச் சூழ்நிலையில் தங்கள் ஊர்களுக்குச் சென்று சொந்த வீடுகளில் சுதந்திரமாக வாழவிரும்புகிறார்கள். ஆனால் முடியவில்லை.

அவர்கள் பிறந்த மண்ணிலே மீண்டும் கால் பதிக்கும் உரிமை அவர்களுக்கு மறுக்கப்படுகிறது. படையினர் விடுகிறார்கள் இல்லை.

வலிகாமம் வடக்கில் பலாலி இராணுவ முகாமைச் சூழவுள்ள 5மைல் சுற்றளவுள்ள பகுதியை அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தி மனித சூனியப் பிரதேசமாகப் படையினர் வைத்திருக்கிறார்கள்.

வீடு வாசல்கள், கடைகள் மற்றும் கட்டடங்கள் எல்லாம் பராமரிப்பின்றிக் கிடந்து சீரழிகின்றன. எத்தனையோ ஏக்கர் விவசாயக் காணிகள் அடங்கிய பொன்விளையும் பூமி செய்கைபண்ணப் படாமல் வருடக்கணக்கில் தரிசாகக் கிடந்து பற்றைகளும் புற்றுகளும் கிளம்பி பாழடைந்து போயிருக்கின்றன.

மற்றப்பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்வது போல வலி.வடக்கு மக்களும் தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்று குடியமர விரும்புகிறார்கள். படையினர் விட்டால் தானே! உயர் பாதுகாப்பு வலயத்தினுள் காலடிவைக்கக் கூடாது என்று கண்டிப்பாக நிற்கிறார்கள்.

எழுத்து மூலமும் நேரில் சந்தித்தும் அரசாங்க அதிகாரிகள், எம்.பிக்கள், அமைச்சர்கள் எல்லோரையும் கேட்டு அலுத்து வலி.வடக்கு மக்கள் இப்போது மறியல், பேரணி என்றெல்லாம் அஹிம்சைப் போராட்டத்தை ஆரம்பித்து விட்டார்கள்.

பலாலி இராணுவ முகாமைப் பாதுகாப்பதற்கென்று சுற்றியுள்ள வலி.வடக்குப் பகுதிகளை அதியுயர் பாதுகாப்பு வலயமாக்கி, ஆள்கள் இல்லாத சூனியப் பிரதேசமாக வைத்திருந்து கண்ட பலன் என்ன?

எவ்வளவோ தூரத்தில் உள்ள யாழ்.அரியாலையில் இருந்து பலாலி இராணுவ முகாமை நோககி பீரங்கித் தாக்குதல் நடத்தப்படவில்லையா?

பாதுகாப்பு வலயத்தினுள் மக்கள் இருந்தால் போராளிகளும் ஊடுருவி வந்து மக்களோடு மக்களாக இருந்து அச்சொட்டாகத் தாக்குதல் நடத்துவார்கள் என்று அஞ்சுவதிலும் நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை.

பலாலியில் இராணுவத்தளம் போன்று தீவுப் பகுதியில் கடற்படைத் தளம் இருக்கிறது. என்றாலும் தீவுப்பகுதி மக்கள் அங்கேயே தங்கியிருக்க தீவுப்பகுதி முழுவதும் அதியுயர் பாதுகாப்பு வலயமாக வைத்திருக்கப்படுகிறதே. இப்போது அங்கே புலிகள் சென்று அரசியல் பணிகளில் ஈடுபடவும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. கடற்படைத் தளத்தோடு சேர்ந்த தீவுப் பகுதிக்கும், இராணுவத் தளத்தோடு சேர்ந்த வலி.வடக்குப் பகுதிக்கும் வெவ்வேறு அளவு கோல்களா?

பாதுகாப்பு என்ற கவசத்தை அணிந்து கொண்டு எத்தனை பாசாங்குகள், மோசடிகள், படுபாதகங்கள், மனித உரிமை மீறல்கள்!

வலி.வடக்கு மக்களுக்கு அரசு நியாயம் வழங்க வேண்டும். தவறினால் தமிழ் மக்களின் எழுச்சிப் பூகம்பத்தை சந்திக்கவேண்டி வரலாம்.

## கடிகாரங்களில் ஒன்று! இயங்க மறுக்கிறது!

### திருத்த வேலைக்காக கொழும்புக்கு

12 வருடகாலத்தின் பின்னர் நேற்றுமுன்தினம் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்ட யாழ்.மணிக்கூண்டு கோபுரத்தின் வேம்படி வீதிப்பக்கம் உள்ள கிழக்குப் புறத்தில் பொருத்தப்பட்ட கடிகாரம் பழுதடைந்ததால் பூட்டிய கையோடு இயந்திரப் பாகம் கழற்றப்பட்டு திருத்த வேலைகளுக்காக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. கடிகாரமுட்களின் சுழற்சி சரிவர இயங்கவில்லை என்று கூறப்படுகிறது.

இந்தக் கடிகாரம் திருத்தப்பட்டு அடுத்த வாரமளவில் மீண்டும் பொருத்தப்பட்டுவிடும் என்று கூறப்படுகிறது.

மணிக்கூண்டு கோபுரத்தில் பொருத்தப்பட்ட கடிகாரங்கள் மின்சாரத்திலேயே இயங்குவதாகவும்-

தற்போதைய மின்சார விநியோக சீருலைவைக் கருத்தில் கொண்டு யாழ்.பொலீஸ் நிலையத்தில் மின்பிறப்பாக்கி இருப்பதால் அங்கிருந்து மின்சார இணைப்பு கடிகாரங்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் - சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தவிர தொடர்ந்து 8 மணித்தியாலங்கள் இயங்கினால் மின்சாரமின்றி மேலும் சில மணித்தியாலங்கள் கடிகாரங்கள் இயங்கும் வசதியும் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

12 ஆண்டு காலமாக சேதமடைந்திருந்த யாழ்.மணிக்கூண்டுக் கோபுரம் புதுப் பொலிவுடன் மிளிர்வதை தினமும் ஏராளமான பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும், தென்னிலங்கையில் இருந்து வந்தோரும் பார்வையிட்டுச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. (ஒ-ரி)




## யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு

# தமிழ்க் கைதிகளை தரைவழி ஊடாக கொண்டு செல்ல அனுமதியில்லை

### சிறை வட்டாரங்கள் விசனம்

ஏ-9-தரைப்பாதை திறக்கப்பட்டு மக்கள் தாராளமாக அதனூடே பயணம் மேற்கொண்டுவரும் நிலையிலும்கூட யாழ். சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை வழக்கு விசாரணைகள் தொடர்பாக கொழும்பு நீதிமன்றங்களுக்கு முன்னிலைப்படுத்த தரைப்பாதை ஊடாக கொண்டுசெல்ல தொடர்ந்து அனுமதி மறுக்கப்பட்டுவருவதாக சிறைச்சாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

தரைப்பாதை ஊடாகக் கைதிகளை கொண்டுசெல்ல அனுமதி மறுக்கப்படிருப்பதால் அவர்கள் தொடர்பான வழக்கு நடவடிக்கைகளில் வீணான காலதாமதங்கள் மற்றும் இழுபறிகள் தோன்றியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தரைப்பாதை ஊடாக கைதிகளைக் கொண்டு செல்ல யாழ். சிறைச்சாலை நிர்வாகத்துக்கு அதன் தலைமையகத்திலிருந்து அனுமதி ஆணை கிடைத்துவிட்டதாகவும் - ஆனால் இதற்கு படையினர் அனுமதிமறுப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட இராணுவத் தலைமை மற்றும் உள்துறை அமைச்சு ஆகியவற்றுக்கு கடிதங்கள் அனுப்பியும் இதுவரை எவ்வித பதில்களும் கிடைக்கவில்லை என்றும் கூறப்பட்டது.

தற்போது யாழ்.சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 18 பேர் தடுத்து வைக்கப்பட்டுள் ளதாவும் -

தரைப்பாதை ஊடாக இவர்களை கொழும்பு கொண்டு செல்ல விடுதலைப் புலிகளும், படையினரும் ஒத்துழைத்தால் வழக்குகளை விரைவாக முடிக்க முடியும் என்றும் -

சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-180)

## அத்தியாவசிய பொருள்களின் விலை அடுத்த மாதம் முதல் குறையும்

### அமைச்சர் சொக்ஸி தெரிவிப்பு

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 9 சத வீதத்தால் குறைந்து விடும் என நிதி அமைச்சா கே.என். சொக்ஸி தெரிவித்தார்.

கடந்த காலத்தில் நடைமுறையில் இருந்த தேசிய பாதுகாப்பு வரி மற்றும் பொருள்கள் சேவைகள் வரி ஆகியவை நீக்கப்படுவதால் இந்த விலைக்குறைப்புக்கு சாத்தியம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார். மேற்குறிப்பிட்ட வரிகளுக்குப்பதிலாக கடந்த வரவு - செலவுத் திட்டத்தின் படி பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நடைமுறைக்கு வரவுள்ளதாகவும்.

இதன் பிரகாரம் அத்தியாவசிய பொருள்கள் மீது விதிக்கப்பட்டிருந்த வரி 19 சத வீதத்திலிருந்து 10 சத வீதமாக குறையும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். இதே சமயம் அத்தியாவசியமற்ற பொருள்கள் மீது 20 சதவீத வரி அறவிடப்பட விருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

## தனங்களப்பு, மறவன்புலவுப் பகுதிகளில் இந்த வருடமும் விவசாயம் இல்லை

### போராட விவசாயிகள் முஸ்தீபு

சாவகச்சேரி,ஜூன்21

தென்மராட்சிப் பிரசேத்தின் விவசாய பெருநிலப்பரப்பாகிய தனங்களப்பு, மறவன்புலவு, கைதடி, கோயிலாக்கண்டி, தச்சன்தோப்புப் பகுதிகளில் இந்த வருடமும் வேளாண்மை செய்ய முடியாத நிலைமை உருவாகிவருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளார்.

இந்த வருடமாவது அப்பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட அனுமதியளிக்கக்கோரி ஒன்றிணைந்து வெகுஜனப் போராட்டத்தில் ஈடுபட அப்பகுதி விவசாயிகள் தீமானித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

சுமார் இரண்டு வருடங்களுக்கு மேலாக விவசாயம் செய்யாமல் தரிசு நிலங்களாக மாறிவரும் சுமார் 6 கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பும். மேட்டுப்பகுதிப் பயிர் நிலமான 2 ஆயிரம் ஏக்கர்கள் நிலப்பரப்பும் வெறுமனே புதர்கள் மண்டி தரிசு நிலமாக மாறிவருகிறது.

இதேசமயம், நுணாவில் தொடக்கம் சாவகச்சேரி நகரம் நோக்கி வயற்பக்கமாக படையினரின் நிலைகள் அமைக்கப் படுவதாகவும் -

இதற்காக சுமார் 750 ஏக்கர் நிலப்பரப்பில் படையினர் முகாம் அமைத்து வருவதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

நுணாவில் பகுதியில் இவ்வயல் வெளிகளூடாக மறவன்புலோ நோக்கி நீண்டபாதை படையினரால் அமைக்கப்பட்டுவருகிறது.

இவற்றின் காரணமாக இப்பகுதிகள் இராணுவப் பிரதேசமாக மாறிவருகிறது. எனவே இப்பகுதிகளில் விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள படையினர் இடமளிக்க வேண்டுமெனக்கோரி வெகுஜனப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-31)

## புலிகள் மற்றும் அரசிடம்

# ஆள்களுக்கெதிரான கண்ணிகளை தடைசெய்யக் கோர நடவடிக்கை

### சர்வசமய அமைப்பு மேற்கொள்கிறது

வலிமேற்கு,ஜூன்21

நிலக்கண்ணி வெடிகளை தடை செய்வதற்கான இலங்கை இயக்கத்தினர் (சர்வ சமய சமாதான அமைப்பு) ஆள்களுக்கெதிரான கண்ணிவெடிகளின் பாவனையை தடைசெய்யக்கோரி அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் மகஜர் ஒன்றை அனுப்பி வைக்க உள்ளனர். இந்த மகஜரில் பொது மக்களின் கையெழுத்துக்களைப் பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இம் மகஜரில் குறிப்பிட்டிருப்பதாவது:

'இலங்கைக் குடி மக்களா கிய நாம் அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற் கும் நினைவூட்டுவது என்னவெனில், உலக நாடுகளின் மூன்றில் இரண்டு பங்குக்கும் மேலான நாடுகள் ஆள்களுக்கெதிரான நிலக் கண்ணிவெடிகளின் பாவனையை முற்றாகத் தடைசெய்துள்ளன.

இத்தகைய நிலக் கண்ணிவெடிகளால் ஏற்படுகின்ற நீண்டகால சமூகப் பொருளாதார அழிவுகள் குறித்து இரு தரப்புகளும் கவனம் செலுத்தவேண்டும். இவ்வெடிகள் குடிமக்களுக்கு ஏற்படுத்தும் இழப்புக்களை கருத்திற்கொள்ளும்படியும் வேண்டுகிறோம். அரசும் விடுதலைப் புலிகள் இயக்கமும் இத்தகைய நிலக் கண்ணிவெடிகளின் பாவனையை உடனடியாக நிறுத்துவதுடன் அரசு நிலக் கண்ணிவெடிகளை தடைசெய்வதற்கான "ஒட்டாவா" ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும் என்றும் இத்தால் நாம் வலியுறுத்துகி றோம்.

இம்மகஜரில் யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்கள் மூலம் பொதுமக்களிடம் கையெழுத்துக்கள் பெறப்படுகின்றன.

சுமார் 10 லட்சம் பொது மக்களிடம் கையெழுத்துக்களை திரட்ட அமைப்பினர் முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகின்றது. (ஒ-175)

### நாளை

ஆனி 08
சனிக்கிழமை
(22.06.2002)
திதி : துவாதசி
காலை 7.47 வரை.
நட்சத்திரம்: விசாகம்
நண்பகல் 12.42 வரை.
சனிப் பிரதோஷ விரதம்
சுபநேரம் : 2.54 - 4.24
ராகுகாலம் : 8.54 - 10.24
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு.

சந்தனமரத்தை நச்சுப் பாம்பு சுற்றிக்கொண்டாலும் மரத்தில் விஷம் ஏறுவதில்லை. அதுபோலவே நல்லவர்களை கெட்டவர்களின் சகவாசம் கெடுப்பதில்லை.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட சுத்தம் செய்த வயீராபாம் புறோயிலர் இறைச்சிக்கோழி மற்றும் கீல்ஸ், சொயன்சியாஸ், பிக்போல்ஸ் மற்றும் கோழிப்பாட்ஸ் வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: T.கரன், இல.150, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (4949)

## விற்பனைக்கு

கல்வியங்காட்டில் பருத்தித்துறை வீதியிலிருந்து 200 யார் தூரத்தில் 11/2 பரப்புக் காணி 4 அறைகளுக்கும் ஒரு Hallக்குமான அத்திவாரத்துடன் விற்பனைக்கு உண்டு. கிணறு, மலசலகூடம், மின்சாரவசதியும் ,வாகனப் போக்குவரத்துக்கான வசதியும் உண்டு. Survey Plan முதலான விவரங்களுக்கு: க.அம்பிகபாகர், 38, சிவன்கோயில் றோட், திருநெல்வேலி தெற்கு. (5026)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 05.11.1970ஆம் ஆண்டு பிறந்த உத்தராடம் முதலாம் பாதம், கிரகபாவம் கூடிய, தற்போது கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட, A/L படித்த கொம்பியூட்டரில் உயர் தேர்ச்சி பெற்று, விவாகரத்துப் பெற்ற பெண்ணுக்கு படித்த மணமகன் தேவை. விள.இல.1545, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (5004)

## வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதி, 2ஆம் குறுக்குத் தெருவுக்கு அருகில் இரண்டு கடைகள் **(14'x22'), (12'x22')** வாடகைக்கு உண்டு. தொடர்பு: க.மயில்வாகனம், 211, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (4999)

## வேலையாள் தேவை

சமையல் வேலை செய்து வீட்டை பராமரிப்பதற்கு ஓர் ஆள் தேவை. எல்லா வசதிகளும் உண்டு. உடன் நேரில் வரவும். தொடர்பு: க.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(5025)

## தவறிவிட்டது

சுருவில், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த இன்னாசிமுத்து செபஸ்ரியன் பீற்றர் ஆகிய எனது விசேட அடையாள அட்டை (இல.09131011467), யாழ்ப்பாணத்துக்கும் ஊர்காவற்றுறைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுரு வில் சேச்சடி வீட்டில் ஒப்படைக்கவும். (5010)

சிவலிங்கம் துசியந்தினி என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.826622377V), விசேட அடையாள அட்டை (இல.0902024323) என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சிவலிங்கம் துசியந்தினி, முதலாம் ஒழுங்கை, இல.169/6, அரசடி றோட், நல்லூர் என்னும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (5028)

## சிறுவர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்21

இலங்கைத் திருச்சபையின் சிறுவர் நலச் சங்கத்தினால் பராமரிக்கப்பட்டுவரும் வடபிராந்திய இல்லச் சிறுவர்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழா நாளை மாலை 3 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் சிறுவர்நல உத்தியோகத்தர் வி.மித்திரரஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபையின் தலைமைக்குரு அருட்செல்வி இரட்ணசிங்கம் கலந்துகொள்வார்.

இந்நிகழ்வில் வன்னிப் பகுதியில் பராமரிக்கப்பட்டு வருகின்ற மேற்படி இல்லச் சிறுவர், சிறுமிகளும் கலந்துகொள்ளவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (152-ரி)

## 'சத்திய தரிசனம்' நூல் வெளியீடு

மூதறிஞரும், சிறுகதை எழுத்தாளருமாகிய சி.சிவசரவணபவன் (சிற்பி) எழுதிய "சத்திய தரிசனம்" சிறுகதைத் தொகுதி நூல் வெளியீடு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. யாழ்இலக்கிய வட்டத்தின் அனுசரணையுடன் வெளியிடப்படவுள்ள இநநூல் வெளியீட்டு நிகழ்வுக்கு எழுத்தாளர் கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) தலைமை வகிப்பார்.

விழாவின் தொடக்க உரையை கல்லூரி அதிபர் க.சிவாஜி நிகழ்த்துவார். கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்) நூலினை வெளியீட்டு வைத்து உரையாற்றுவார்.

நூலின் மதிப்புரையை எழுத்தாளர் திருவாட்டி கோகிலா மகேந்திரனும், பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) வ்ும் நிகழ்த்துவார்கள்.

செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் சிறப்புரையாற்றுவார். (ஒ-152)

## கூறுவிலை கோரல்

தரமான செங்கற்கள் தேவைப்படுகின்றன. வழங்க விரும்புவோர் உரிய மாதிரி / விவரங்களுடன் யாழ்.பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளர் அவர்களை பராமரிப்புப் பகுதியில் 28.06.2002இற்கு முன் அலுவலக நாள்களில் காலை 8.30 மணி தொடக்கம் 10.30இற்கு இடையில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

த.பெ.இல.~57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (C/22613)

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை சின்னத்தம்பி

சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சின்னத்தம்பி 19.06.2002 புதன்கிழமை மட்டுவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும் பேரின்பநாதன் (சுவிஸ்), யோகராசா (சுவிஸ்), இராசேஸ்வரி, நடராசா, சறோஜினிதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவதேவி (சுவிஸ்), றதிதேவி (சுவிஸ்), சரவணபவானந்தன், பிறேமசொரூபி, சண்முகராசா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் கௌசிகன், லக்ஷாயினி, நிஷாந்தன், நிவேதன், கவிதா, துசிதா, சுமித்திரா, தர்சிகா, சிவதர்சன், சிந்தூரன், மதூஷன், யதீசா, சாருஜான், நிலானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (22.06.2002) சனிக்கிழமை பகல் 10 மணிக்கு மட்டுவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மட்டுவில் வடக்கு,*
*சிவன்கோயில் வீதி,*
*சந்திரபுரம்,*
*சாவகச்சேரி.*

(5029)

தகவல்:
ஐ.சரவணபவானந்தன் *(பெரியானந்தன்),*
சி.நடராசா *(மகன்)*

## உடன் தேவை

உடைந்த போத்தல் ஓடு, கறுப்பு, வெள்ளை பழைய கடதாசி மட்டை, வெற்று பியர் போத்தல்கள், வெள்ளை வெட்டுக் கழிவுப் பேப்பர்கள் என்பன கொள்வனவு செய்யப்படும். பொருள்களுக்கு ஏற்ப தகுந்தவிலை வழங்கப்படும். வைத்திருப்பவர்கள் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

**பாலன் இரும்பு வாணிபம்**

இல.256, கஸ்தூரியார் றோட்,
கன்னாதிட்டிச் சந்தி (மக்கள் வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம். T.P.No.: 021-2525

(4998)

## தேவை

கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவை.

- வாகன சாரதி -
  *தகைமைகள்:* கார், வான் (VAN) சாரதி அனுமதிப்பத்திரம், கிராம சேவையாளர் உட்பட இரண்டு நற்சான்றிதழ்கள்.
- சமையல் உதவியாளர் (பயிலுநர்)
- வரவேற்பாளர்
- எழுதுவினைஞர் (பெண்கள் விரும்பத்தக்கது)

*வயதெல்லை:* 25 - 55

வருபவர்கள் சுறுசுறுப்பானவர்களாகவும் நேரம் பார்க்காமல் வேலை செய்பவர்களாகவும் உழைத்து முன்னேற விரும்புபவர்களாகவும் இருத்தல் அவசியம்.

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் உரிய ஆவணங்களுடனும், நற்சான்றிதழ்களுடனும் நேரில் வரவும்.
(மு.ப. 11.00 மணிக்கும் 2 மணிக்கும் இடையில்) (5013)

**ஜெசீத்தாரா விருந்தகம்**
19/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

**மரணசாதன அதிகாரப் பத்திர அலுவலரால் குடியியல் நடவடிக்கை முறைச்சட்டக்கோவையின் 529 (2)ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும்**

## அறிவித்தல்

காலஞ்சென்ற
நல்லதம்பி மகள் பாக்கியலட்சுமியின்
மரணசாதனம் சம்பந்தமாக

வழ. இல.:- மரணசாதன / 1272
நியாயாதிக்கம்

கந்தசாமி துரைராசா
சீனசூட்டம், வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.
- மனுதார்

எதிர்
எதிர் மனுதார் இல்லை.

இவ்வழக்கில் மேல் விவரிக்கப்பட்ட இறந்தவரின் மரணச் சொத்து தொடர்பின் அவரது மரணசாதனத்தை எண்பிப்பதற்கும் மரணசாதன அதிகாரப்பத்திரம் பெறுவதற்கும் மேற்படி மனுதாரால் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது. மரணசாதனம் எண்பிக்கப்பட்டதென வெளிப்படுத்தி மேலே குறிப்பிடப்பட்ட மனுதாருக்கு மரணசாதன அதிகாரப்பத்திரம் குறித்த மரணசாதனம் இணைக்கப்பட்டோ இணைக்கப்படாமலோ வழங்கப்படுவதற்கான, கட்டளையொன்று (2002.09.06) ஆக்கப்படுவதற்கு ஆட்சேபனையுடைய ஆளெவரும் 2002ஆம் ஆண்டு 09ஆம மாதம் 06ஆம் திகதிக்கு முன்னர் அத்தகைய ஆட்சேபனையை (சத்தியக் கடதாசியின் ஆதாரத்துடன்) எழுத்தில் கோவை செய்யுமாறு தேவைப் படுத்தப்படுகிறது.

2000.06ஆம் மாதம் 13ஆம் திகதி

மன்றின் கட்டளைப்படி
சீ.சந்திரலிங்கம்
மரணசாதன அதிகாரப்பத்திர அலுவலர்,
பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றம்.
பதிவாளர்
மாவட்டமன்று, பருத்தித்துறை.

வரைபு
திருமதி பவானி சற்குணராசா
மனுதாரின் சட்டத்தரணி. (5024)






# கௌரவத்துடன் தமிழர் வாழும் நிலை பேச்சுமூலம் கிட்டினால் மகிழ்ச்சியே!

## மகளிர் அணிப் பொறுப்பாளர் உரை

ஊர்காவற்றுறை,ஜூன்21

"தமிழ்மக்கள் கௌரவத்துடன் வாழக்கூடிய ஒரு சூழல் பேச்சு மூலம் எட்டப்படுவதையே விடுதலைப் புலிகளாகிய நாங்கள் விரும்புகிறோம்."

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியற்றுறை மகளிர் அணிப் பொறுப்பாளர் தமிழ்விழி.

தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் தலைமையில் வேலணைத் துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், "நீண்ட இடைவெளியின் பின்னர் நாங்கள் உங்களைச் சந்திக்கிறோம். இங்குள்ள நிகழ்வுகளை நாம் பார்க்கும்போது இந்த மக்கள் எப்பொழுதும் நீதியின் - நேர்மையின் - பக்கமே உள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது. ஒட்டுமொத்த தமிழ் இனத்தின் பாதுகாப்பு அரணாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளனர். யாழ். கோட்டையில் கொடியை ஏற்றும்போது ரத்வத்தை கூறினார் "85 வீதமான புலிகளை அழித்துவிட்டோம். மிகுதி 15 வீதமான புலிகளை விரைவில் அளிப்போம் என்று."

"நாம் யாழ். குடாநாட்டில் அரசியல பணிகளை ஆரம்பிக்கும் பொருட்டு உள்ளே வருவதற்காக முகமாலையில் காத்துநின்றபோது, இராணுவ அதிகாரி ஒருவர் "எங்கே அந்த 18பேரும் ஏனெனில் அந்த 18 பேரும் இங்கு வந்தால் யாழ். குடாநாட்டில் 90 வீதமான பிரச்சினைகள் தீர்ந்துவிடும்" என்றார்.

"எமது போராளிகளினதும், மக்களினதும் பல்வேறு அர்ப்பணிப்புக்கு மத்தியிலேயே இந்த நிலைமை தோன்றியுள்ளது. தமிழர்களை என்றும எவரும் அழிக்கமுடியாது என்பதை நாம் மீண்டும் நிருபித்துள்ளோம். எம்மை எவரும் பேரம்பேசமுடியாது. 'தீச்சுவாலை' இராணுவ நடவடிக்கையானது பல்வேறு ஆயுதங்களுடன் பெரும் எடுப்பில் தொடங்கப்பட்ட போதும் கடைசியில் வெறும் தீக்குச்சியானது.

"அன்று 8 பேரோடு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டமே இன்று பல வருடங்களுக்குப் பின்னர் இந்த நிலைக்கு வளர்ந்துள்ளது. புலிகள் நூற்றுக்கு நூறுவீதம் மக்களை நம்பியே உள்ளோம்.

"எமக்குத் தேவை எமது மக்களின் கௌரவத்துடனான வாழ்வு. அது பேச்சு வார்த்தை மூலம் எட்டப்படுமாயின் அதை நாம் வரவேற்கிறோம்.

"மீண்டும் எமது முதுகில் குத்தமுற்பட்டால் எமது மக்கள் எதை கூறுகிறார்களோ அதை நாம் செய்வோம்."

என்று அவர் தெரிவித்தார். (ஒ)

# மீனவர் மீது கெடுபிடி!

சுழிபுரம் சவுக்கடி கடற்கரையிலிருந்து இயந்திர மீன்பிடிப்படகுகள் மூலம் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஆழ்கடலுக்கு இயந்திரம் பூட்டிய படகுகளில் எந்நேரமும் மீன்பிடிக்கச் செல்லலாம் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்ததைத் தொடர்ந்து சுழிபுரம் மீனவர்கள் கடந்த பல வருடங்களாகத் தமது வீடுகளில் வைத்திருந்த இயந்திரங்களை படகுகளில் பூட்டிக்கொண்டு சுழிபுரம் சவுக்கடி கடற்கரையிலிருந்து கடலுக்குச் செல்லப் புறப்பட்டனர். அப்போது அங்கு கடமையிலிருந்த கடற்படையினர் மீனவர்களையும் இயந்திரப் படகுகளையும் கடலுக்குள் செல்லவிடாது தடுத்து நிறுத்தியதாகவும் இதனால் ஏமாற்றத்துடன் மீனவர்கள் வீடுகளுக்குத் திரும்பியதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை கடந்த சில நாள்களாக வன்னியிலிருந்து மீளக் குடியமர்ந்த சுமார் 40 மீனவர்கள் 'பாஸ்' இல்லாமையினால் சுழிபுரம் கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.(ஒ-175)

# அந்தணர் அறிவை வளர்த்திட ஆறுமாத சமஸ்கிருத வகுப்புகள்

## இந்துமத குருமார் ஒன்றியம் நடத்தும்

வலிகாமம் தெற்கு,ஜூன்21

சமஸ்கிருதம் எழுத - வாசிக்கத் தெரியாத அந்தணர்களுக்கு அவற்றில் ஆறுமாத காலப் பயிற்சி கொடுக்கவும், அவர்களை முழுமையான சமய அறிவு பெற்ற சிவாச்சார்யார்களாகப் பரிணமிக்கச் செய்யவும், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் நடவடிக்கை எடுக்கவுள்ளது. மிகவிரைவில் சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தானத்தில் இதற்கான வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவிற்குத் தலைமைவகித்த ஒன்றியத் தலைவர் பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள் மேற்கண்டவாறு கூறினார்.

மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி பிரம்மஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வர சிவாச்சாரியார் ஆசியுரை வழங்கினார்.

"இடப்பெயர்வு காரணமாக ஒன்றியத்தின் செயற்பாடுகளில் கடந்த காலங்களில் சில பின்னடைவுகள் ஏற்பட்டாலும் இன்று அத்தொய்வு நிலை மாறிவிட்டது. விரைவாகத் தனது பணிகளை முன்னெடுத்துச் செல்லும் ஒன்றியத்துக்கு, நிலையான ஒரு கட்டடம் இல்லாதது ஒரு பெரும் குறையாகும். அதனை [illegible] சகல குருமார்களும் முன்வந்து உதவ வேண்டும் என்று தலை[illegible] பிரம்மஸ்ரீ ப.மனோகரக் குருக்கள் [illegible]துரையின் போது மேலும் குறிப்[illegible]டார்.

விழாவில் வாழ்த்துரை வழங்கிய இணுவில் காயத்திரி பீடம் பிரம்மஸ்ரீ தாணு.மகாதேவக் குருக்கள் கூறியதாவது:-

"சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் சிலகாலம் ஒருமயக்க நிலையில் உற்சாகம் குன்றிய நிலையில் இருந்தாலும் இன்று அதன் சிறந்த நிர்வாகத்தால் புத்துணர்ச்சி பெற்று சிறப்பாக இயங்குகிறது. ஒன்றியம் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்த வேண்டும். வெறுமனே பாராட்டு விழாக்களை மட்டும் நடத்தாமல் கருத்தரங்குகள், அறிவுப் போட்டிகள், சமயசம்பந்தமான விவாதங்கள் போன்றவற்றை நடத்தவேண்டும். பல ஆக்கபூர்வமான நூல்களை இலவசமாக அச்சிட்டு வெளியிடும் அதன் பணி பாராட்டத்தக்கது.

"ஆலயக் கிரியா முறைகளில் இன்று பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. கிரியை முறை வேறுபாடுகளை ஒழுங்குபடுத்தக்கூடிய நிலையில் இன்று நாம் உள்ளோம். ஒன்றியம் இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கிரியை முறைகளைச் சீர்ப்படுத்தி, ஒழுங்குமுறைக்கு உட்படுத்த வேண்டும்" என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் "அனுஸ்மரணம்" - ஸ்தோத்திரங்கள் நூலை இணுவில் குமார சரவணபவக் குருக்கள் வெளியிட்டுவைக்க, நூல் ஆய்வுரையை ப.சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்) நிகழ்த்தினார். (ஒ-152)

### பஸ் சாரதி தாக்கப்பட்ட சம்பவம்:

# பருத்தித்துறை டிப்போ ஊழியர் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூன்21

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலையைச் சேர்ந்த சாரதிகள், நடத்துநர்களால் நேற்றுமுன்தினம் நடத்தப்படவிருந்த வேலைநிறுத்தப் போராட்டம், பொலீஸாரினால் வழங்கப்பட்ட உத்தரவாதத்தை அடுத்து கைவிடப்பட்டது.

கடமை நேரத்தில் வழிப்பயணியால் பஸ் சாரதி ஒருவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தையடுத்து வேலைநிறுத்தத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பொதுமக்களின் நலன் கருதி பொலீஸாரால் மேற்கொள்ளப்பட்ட மேல்நடவடிக்கை உத்தரவாதங்களை அடுத்தே வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதாகக் கூறப்பட்டது.

கடந்த செவ்வாய் மாலை 4.45 மணிக்கு யாழ். பஸ்நிலையத்தில் இருந்து புறப்பட்டு உடுப்பிட்டி வல்வை ஊடாக பருத்தித்துறைக்குச் சென்ற பஸ்ஸின் சாரதி கணபதிப்பிள்ளை கனகசபை என்பவரை உடுப்பிட்டிப் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் சென்ற வழிப்போக்கர் ஒருவரால் தடுத்துநிறுத்தப்பட்டு பயணிகள் முன்னிலையில் தாக்கப்பட்டார் எனக் கூறப்பட்டது.

பஸ்ஸை முந்திச்செல்ல முயன்ற சமயம் மேற்படி மோட்டார் சைக்கிள் வீதியில் சரிந்து விழுந்து விபத்துக்குள்ளானது என்றும் -

இதனால் ஆத்திரமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி பஸ்சாரதியைத் தாக்கியதாகவும் கூறப்பட்டது.

இது தொடர்பாக பஸ் சாரதி வல்வெட்டித்துறைப் பொலீஸில் முறைப்பாடு செய்ததை அடுத்து நேற்றுமுன்தினம் நணபகல்வரை அவகாசம் கொடுத்து வேலைநிறுத்தம் ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பொலீஸாரின் தீவிர முயற்சியினை அடுத்து வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-15-173)

### சந்நிதியான் ஆச்சிரம வராந்த நிகழ்வு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர் சந்நிதியான ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வராந்த வெள்ளி நிகழ்வில் இவ்வார நிகழ்வில் "பகவத்கீதை" எனும் தொடரில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் அவர்கள் சொற்பொழிவாற்றவுள்ளார்.

(ஒ-ரி)

# வாசகர் திருமுகம்

## ஆலயங்களில் மீண்டும் மிருகபலியா?

ஆலயம் என்பதன் பொருள் ஆன்மாக்கள் இலயப்படும் இடம் என்பதாகும். சிவன் ஆலயமாக இருக்கலாம் அல்லது வைரவர் ஆலயமாக இருக்கலாம். காளியம்மன் ஆலயமாக இருக்கலாம். அனைத்து ஆலயத்திற்கும் இது பொருந்தும்.

ஆன்மாக்கள் சாந்தி பெறவேண்டிய இடத்தில் மிருகங்களைப் பலியிடுவது எந்தவகையில் நியாயமாகும்? இந்து மதமாக இருக்கலாம். பௌத்த மதமாக இருக்கலாம். அனைத்து மதங்களும் அன்பையே போதிக்கின்றன.

ஆலயங்களில் நடைபெறுகின்ற மிருக பலியை வேதம் ஒருவகையில் ஒப்புக்கொண்டாலும் ஆகமம் அதனை முற்றாக எதிர்க்கின்றது. இன்று எமது இந்து ஆலய அமைப்புமுறை தொடக்கம் ஆலயக் கிரியைகள் வரை அனைத்தும் வேத முறைப்படியா நடைபெறுகின்றன? இல்லையே! அவை அனைத்தும் ஆகம விதிப்படியே நடைபெறுகின்றன. ஆகமத்தில் இல்லாத மிருகபலியை எமது மதத்தில் இடம்பெற எவ்வாறு அங்கீகரிக்க முடியும்?

முன்னொரு காலத்தில் மாநகரசபை நாய்களைப் பிடிக்கின்ற தள்ளு வண்டிகளுக்கு 4 பக்கங்களும் மறைப்புப் போடவேண்டும் என்ற நடைமுறை இருந்தது. ஏனென்றால் அதற்குள் நாய்கள் துன்பப்படும்போது அதனைப் பார்க்கின்ற எதிர்காலச் சந்ததியினரின் (மாணவர்கள்) மனத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால்!

ஆனால், இன்று சில ஆலயங்களில் ஆடுகள், கோழிகள் வெட்டும்போது அதனைப் பார்க்கின்ற எதிர்காலச் சந்ததிகளின் உள்ளத்தில் எத்தகைய கொடூர எண்ணங்கள் தோன்றும் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றார்களே. ஞானப்பிரகாசர் பிறந்த இம்மண்ணில் இந்தச் செயல்களைத் தெரிந்தும் தெரியாதவர்கள் போல எமது மதப் பெரியார்களும், அறிஞர்களும் இருப்பது வேதனையளிக்கின்றது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஆலயங்களில் மிருகபலி தடைசெய்யப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வந்த பின்னரும், சில ஆலயங்களில் மிருகபலி நடைபெற்றிருக்கின்றது. எனவே இதனை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்கு விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

*பொன்னாலை.* **என்.தமிழின்பன்.**

## அளவெட்டிக்கு மின்இணைப்பு எப்போது?

உலகத்தில் வாழ்கின்ற மக்கள் எல்லோரும் மக்கள்தான். அதிலும் கிராமப்புற வாழ் மக்கள், நகர்ப்புற வாழ்மக்கள் என்ற பிரிவு உண்டு. அதில் நகர்ப்புற மக்களுக்கு ஒரு சலுகை, கிராமப்புற மக்களுக்கு ஒரு சலுகையா?

அளவெட்டி ஒரு கிராமப்புறம்தான். ஆனால், அதற்காக மேற்படி கிராமத்துக்கு மின் விநியோகம் தடைசெய்யப்பட்டிருப்பது வேதனை தருவதாய் உள்ளது.

வீட்டுக்கு ஒரு கம்பம் நட்டுவிட்டால் மின் கிடைத்துவிடுமா? தான் முன்னர் விநியோகித்த இடங்களுக்கே மின்சாரத்தை ஒழுங்காக விநியோகிக்க மின்சாரசபையினால் முடியவில்லை. அதற்கிடையில், எல்லோருக்கும் எவ்வாறு மின்சாரத்தை வழங்குவது என அங்கலாய்க்கின்றனர் மின்சார சபையினர்.

இலங்கை மின்சாரசபை அளவையூர் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்திவிட்டது.

மின்சாரசபை அதிகாரிகள் செய்கையை சொல்லால்க்காட்டினால் மட்டும்போதுமானதல்ல. செய்கையை செய்கையால்தான் காட்டவேண்டும்.

கந்தரோடை, சண்டிலிப்பாய்வரை மின்சாரம் இருக்கின்றது. அளவெட்டிக்கு மட்டும் ஏன் இதுவரை மின்விநியோகம் இல்லை. அதிகாரிகள் தகுந்த பதில் தருவார்களா?

*அளவெட்டி.* **கண்ணன்.**

## வீடு சேதமடைந்தவர்களுக்கான மிகுதிக் கொடுப்பனவு கிடைக்குமா?

வலிகாம இடம்பெயர்வின் போது தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்த நாம் திரும்பவும் மீளக்குடியமர்ந்து 7 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கென ஆயிரத்து 500 ரூபாவிற்கு குறைந்த வருமானம் உடையவர்களுக்கென சிபார்சு செய்யப்பட்ட 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவில் எனக்கு இதுவரை முதற்கட்டமாக 10 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

நான் விண்ணப்பம் செய்து சில வருடங்களின் பின்னர்தான் எனக்கு முதற்கட்ட கொடுப்பனவு வழங்கப்பட்டது. பணம் தந்த கையோடு இரண்டாம் கட்ட 10ஆயிரம் ரூபாவிற்கான முத்திரையின்மேல் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் எமது பிரதேச செயலக அதிகாரிகள். ஆனால் கையொப்பம் பெற்று இன்று ஒரு வருடமும், 3 மாதங்களும் ஆகிவிட்டது. யாழ்.செயலகத்தில் விசாரித்தால் நிதி ஒதுக்கீடு செய்து வரவில்லை என்று சொல்கிறார்கள்.

இதற்கிடையில் தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுடைய வீடு இழப்பீட்டு கொடுப்பனவிற்கும் ஆயத்த வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. அதுவும் தேவைதான். ஆனால் நிதி ஒதுக்கீடு செய்து அனுமதியில்லாமல் ஏன்? அவசரப்பட்டு முத்திரையில் கையொப்பம் வாங்க வேண்டும்? முத்திரையில் கையொப்பமிட்டால் பணம் பெற்றுக் கொண்டதற்கு சரிதானே?

புனர்வாழ்வு அமைச்சருக்கு இதுவிடயமாக அதிகாரிகள் தெரிவித்து இதுவிடயத்தில் அசமந்தப்போக்கைக் கைவிட்டு மக்கள் கஷ்டம் தீர வழி செய்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுவிடயத்தில் மக்கள் எதிர்காலத்தில் வீதியில் மறியற்போராட்டம் நடத்தவேண்டியும் வரலாம். அரச அதிபரும், அதிகாரிகளும் மனம் வைத்தால் இது விடயமாக அமைச்சு மட்டத்தில் தொடர்பு கொண்டு ஆவன செய்யலாம். மனம் வைத்துச் செய்வார்களா? மக்கள் குடியிருப்புக்கள் சீராகுமா? எப்போது?

*சுண்டிக்குளி.* **அன்ரனி.**

### கடன்பட்டுத் தொழில் செய்யும்

# வடமராட்சி மீனவரின் வலைகளை அறுத்தெறியும் இந்தியப் படகுகள்!

வடமராட்சி,ஜூன்21

வடமராட்சி வடக்குப் பிரதேசக் கடலில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் 'றோலர்' படகுகளால் தமிழ் மீனவர்களின் பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான மீன்பிடிவலைகள் கடந்த சில தினங்களில் அறுக்கப்பட்டுள்ளன.

இதனால் வடமராட்சி வடக்கு மீனவர்கள் தற்போது புதிய பிரச்சினை ஒன்றுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பொலிகண்டிக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழ் மீனவர் ஒருவரின் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வலைகளை அப்பகுதிக்கு மீன்பிடிக்க வந்த இந்திய மீனவர் படகு, அறுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இதற்கு முந்திய தினம் இரவு பருத்தித்துறைக் கடலில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 20 வலைகளும் இவ்வாறு இந்திய மீனவர்களின் 'றோலர்' படகால் அறுக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சம்பவங்களால் மீன்பிடித் தடை நீக்கப்பட்ட பின்னர் கடன்பட்டு மீன்பிடி உபகரணங்களை வாங்கிக் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள தமிழ் மீனவர்கள் இந்திய படகுகளின அத்துமீறிய செயலால் பெரும் நஷ்டத்தை அடைய நேரிட்டுள்ளது. (ஒ-173)

# சிலப்பதிகார ஆய்வரங்கில் கௌரவிப்புப் பெறுபவர்கள்

## பெயர்ப் பட்டியல் வெளியானது

யாழ்ப்பாணம், ஜூன்21

நாளை முதல் யாழ்.பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ள சிலப்பதிகார ஆய்வரங்கின் முதலாம் நாள் நிகழ்வில் கௌரவிப்புப்பெறும் இந்துக் குருமார் மற்றும் பாடசாலை உபகரணம்பெறும் ஆதரவற்ற இந்து மாணவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக குருமார் விவரம் வருமாறு:-

**கோப்பாய்**

சிவஸ்ரீ ஆ.சோமசுந்தரக் குருக்கள், சிவஸ்ரீ ஆ.சந்திரசேகரக் குருக்கள், சிவஸ்ரீ மு.சோமசுந்தரக் குருக்கள், சிவஸ்ரீ சோ.வாகீஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ சதா.பாலசௌத்திரி, சிவஸ்ரீ க.ஜெயராமக் குருக்கள், சிவஸ்ரீ மு. ஐயாத்துரைக் குருக்கள், சிவஸ்ரீ பூ.கீதாச்சந்திரக் குருக்கள், சிவஸ்ரீ கா.சாம்பசதாசிவக் குருக்கள், சிவஸ்ரீ வை.கந்தசாமிக் குருக்கள்.

**தெல்லிப்பழை**

சிவஸ்ரீ கா.தியாகராஜக் குருக்கள், சிவஸ்ரீ கா.துரைச்சாமிக் குருக்கள், சிவஸ்ரீ க.இரத்தினஐயர், சிவஸ்ரீ வை. ஞானசேகரஐயர், சிவஸ்ரீ சிவகணேசலிங்கக் குருக்கள், சிவஸ்ரீ தி.செந்தில்நாதசர்மா, சிவஸ்ரீ ப. சோமஸ்கந்தசர்மா, சிவஸ்ரீ கு.பாலசுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ சி.நடேஸ்வரசர்மா, சிவஸ்ரீ நடனசபாபதிசர்மா.

**நல்லூர்**

சிவஸ்ரீ வி.சுப்பிரமணியசர்மா, சிவஸ்ரீ மு.கனகசபாபதிக் குருக்கள், சிவஸ்ரீ வே.சிங்காரவேல்ஐயர், சிவஸ்ரீ க.செந்தில்நாதசர்மா, சிவஸ்ரீ ச.சிவசுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ பா. நகுலேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ சோ. நடராசக் குருக்கள், சிவஸ்ரீ இ.சுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ கு.மங்களேஸ்வரஐயர், சிவஸ்ரீ கை.திருஞானசம்பந்தக் குருக்கள்.

**யாழ்ப்பாணம்**

சிவஸ்ரீ தி.சங்கர்ராஜக் குருக்கள், சிவஸ்ரீ தி.பாலசுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ நா.யோகேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ உ.கிருபானந்தக் குருக்கள், சிவஸ்ரீ வ.இராஜேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ பா.முரளிதரக் குருக்கள், சிவஸ்ரீ ச.சிவசாமிக் குருக்கள், சிவஸ்ரீ இ.பிரணதாக்திஸ்ஹரக் குருக்கள், சிவஸ்ரீ நா.முத்துச்சாமிக் குருக்கள், சிவஸ்ரீ கி.வைத்தீஸ்வரசர்மா.

**உடுவில்**

சிவஸ்ரீ வா.சர்வேஸ்வரசர்மா, சிவஸ்ரீ நீ.மணியக் குருக்கள், சிவஸ்ரீ வா.குமாரசாமிசர்மா, சிவஸ்ரீ ப.பரமசிவக் குருக்கள், சிவஸ்ரீ ச.சிவகடாட்சக் குருக்கள், சிவஸ்ரீ தா.மகாதேவசர்மா, சிவஸ்ரீ ந.உருத்திரமூர்த்தி ஐயர், சிவஸ்ரீ வை.சோமஸ்கந்தக் குருக்கள், சிவஸ்ரீ தா.அரிகரசுப்பிரமணியஐயர், சிவஸ்ரீ ச.வரதராசக் குருக்கள்.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக உபகரணம்பெறும் மாணவர் விவரம் வருமாறு:-

**கோப்பாய்**

இ.சுகந்தினி, க.சிறிமுருகன், செ. செல்வக்குமார், செ.மதுரா, ந.தனராஜன், க.உ...நந்தினி, அ.டிலான், ச.அஜந்தா, தெ.ரேகா, இ.லசிதரன், இ.த.தனுசியா, சு.றஜீ.., ம.மாலினி, இரதி, செ.பிரசாந், சிறிலோகன விஜிதா நா.சசிரூபன், ஜே. அமலதாஸ், எஸ். உதயசசுந்திரன், ச.றம்மியா.

**தெல்லிப்பழை**

க.பார்த்தீபன், சி.கஜேந்திரா, சி.தர்சனா, வே.பிரதீபன், சி.தர்ஷிகா, வே.பிரதீபா, வி.விபூஷனா, இ.கிரிஜனா, இ.ஜிவிதராஜ், சி.சிவநாதன், சி.லாவண்யா, ச.தனுஷா, சா.அஜித்பிராங்கின், அ.நிரோஜினி, கே.பாமினி, தே.அனிஷா, தே.தனிஷா, மு.சுஜீவன், மு.கிருசாந், ப.துஸ்யந்தன்.

**நல்லூர்**

ந.தேனுப்பிரியா, நி.திரோஜன், க.கஜன், இ.நிசாந்தினி, எஸ்.மைதிலி, அ.சுலோஜினி, கு.துவாரகா, செல்வின் லோகேஸ்வரன், ஐ.அரிகரன், எஸ்.சரிதா, பு.சிந்துஜா, ம.அனுசா, க.கதிர்காமநாதன், ந.ரதிக்குமார், பா.சைலஜா, அ.பிரசாந், சிறி.தவராணி, கு.மதுசுதன், இ.அசாக்குமார், மயில்வாகனம், சோதிலிங்கம், த.சுதர்ஜன், மு.மனோப்பிரியா, த.றோசான், அசோககுமார், மோ.சந்திரிக்கா, சு.செல்வராணி சு.கோபிராஜ், சே.தனுசன், வி.வினோதா.

**யாழ்ப்பாணம்**

யோ.மகேந்திரன், யோ.ஜசோதா, சு.யசிதரன, சு.யசிந்தா, கி.சாந்திஜன், இ.றயந்தன், இ.சத்விஷி, பா.கஜீபன், பா.பால்ராஜ், உ.சுஜீவா, உ.மயூரா, இ.நந்தினி, வி.தாட்சாயினி, ச.கிருபாலினி, பா.தனுசிகா, இராசலிங்கம் நந்தினி, அ.செந்தூரன், பு.ரவீந்திரன், பு.ராஜ்குமார், இ.சாலினி.

**உடுவில்**


க.கேதரஞ்சினி, சு.சுமதி, இ.கஸ்தூரி, மு.லலிதாம்பிகை, உ.தாட்சாயினி, யோ.பிரியதர்சினி, வ.விக்கினேஸ்வரி, ம.சசிதா, கெ.லசிந்தா, செ.சிவதர்சினி, ம.சுகிர்தா, கி.ஆஷா, சு.அஜித்தா, ச.சசிக்கா, சு.ஜெயவதனி, வ.புவனேந்திரன், ஊ.சசிதரன், யோ. பிரபா, கு.கௌசிகன், ம.மயூரன், ச.புஸபராஜ், செ.சசிராஜ், போ.அமுதகுமார், சு.அம்பிகா, சி.லிங்கேஸ்வரி, மயூரன, கங்கா, கதீஸ்வரன், தந்தியா, அனுசா.

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமையும், மறுநாள் திங்கட்கிழமையும், கௌரவிப்புப் பெறுவோர் விவரம் தொடர்ந்து வெளிவரும்.

(எ)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 03 - 02 - 1927

இறப்பு 21 - 06 - 2001

## ஆசீர்வாதம் யோசப்

*"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் குடியிருக்க வேண்டும்"* *(தி.பா. 27:4)*


இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (21.06.2002) வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*425 (793), நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/22615)

குடும்பத்தினர்
*(நாரந்தனை)*

---

# கலையாத நினைவுகளுடன் கலைந்த ஓராண்டு



தோற்றம் 15 ✣ 07 ✣ 1939

மறைவு 21 ✣ 06 ✣ 2001

## பொ.றெமிசியஸ் தம்பிநாயகம்

"உயிரே உயிரே அழைத்ததென்ன? ஓசை கேட்டு
ஓடி வந்தேன் மறைந்ததென்ன?"
"அம்மா" என்று அழைத்த குரல் அடங்க முன் உன்
ஆவி பிரிந்த மர்மம் என்ன?
விடைகாணா வினாவாக கடந்த ஓராண்டாய் நான்
கேட்கிறேன் ஒரு கேள்வி.

*- உன் மனைவி வத'*

கட்டிலில் இருந்த வண்ணம் கனிந்த குரலில்
கர்ச்சிக்கும் சிங்கமாய் கட்டளையிடும் அப்பாவைக்
கடந்த ஓராண்டாய்த் தேடுகிறோம்....

*- உன் மக்கள் அறுவர்*

பூங்கனிச் சோலை வாடியது. பூத்த மலர்களும் வதங்கியது
இது நிஜம். நிழல் அல்ல.
சுகங்கள் எல்லாம் சோகங்களாய்
சோகங்கள் எல்லாம் சுமைகளாய்
நடந்தவை யாவும் நிஜங்கள், நடக்கப் போகின்றவை நிழல்கள்.
நித்தம் வடிப்போம் புதுக் கவிதை உன் நிழல் அடியில் நின்று.
இன்று, உன் மனைவி துணையிழந்த அன்றில் பறவை
இன்று உன் மக்கள் வேரறுந்த ...
ஆகவே தனிமையில் நாங்கள் இன்று...

*327/9, கதிர்றல் ஒழுங்கை.*
*யாழ்ப்பாணம்.* (5030)

- குடும்பத்தினர்.

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 ✦ 07 ✦ 1916

மறைவு 02 ✦ 07 ✦ 2001

## திருமதி
## பொன்னையா சீதைப்பிள்ளை

(உரும்பிராய் தெற்கு)

திதி: 21.06.2002 (இன்று) வெள்ளிக்கிழமை

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
சிறந்த கல்வியை ஊட்டி நாட்டினில்
நல்லவர்களாக வாழ நமக்கு வழிகாட்டிய
அன்புத் தெய்வமே!
தாங்கள் இயற்கை எய்தி ஓராண்டு
உருண்டோடி விட்டது என்பது உண்மையே.
ஆனால் எங்கள் உள்ளங்களில் இருந்து
நீங்கள் என்றுமே நீங்க மாட்டீர்கள்.
உங்கள் ஆத்மசாந்தியின் பொருட்டு
நாம் அனைவரும் ஒன்றிணைந்து
எல்லாம்வல்ல பரம்பொருளை
மனதில் இருத்திப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

*"மகேசுவரம்"*
*மானிப்பாய் வீதி,*
*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.* (5027)

மக்கள், மருகர்,
பேரர், பூட்டர்.

---


# கொழும்பில் குதூகல ஆரம்பம்

வீடியோ புகைப்படத்துறையில் இற்றைக்கு 15 வருடங்களுக்கு மேலாக யாழ்.நகரில் சேவை புரிந்துவரும் "சுப்பஸோ" இப்பொழுது கொழும்பு மாநகரில் கொட்டாஞ்சேனையில் எமது சேவையை இன்று (21.06.2002) முதல் ஆரம்பித்து வைக்கிறோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

உங்கள் புகைப்பட சுருள்களை டிஜிற்றல் முறையில் உடனுக்குடன் பிரதியாக்கம் செய்து பெற்றிடவும் உங்களுக்குத் தேவையான சகல அளவுகளிலும் புகைப்படம் எடுத்துப் பெற்றிடவும் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்வுகளை வீடியோ, புகைப்படம் எடுத்திடவும் நீங்கள் நாடவேண்டிய இடம்:

## சுப்பஸோ வீடியோ ஸ்ருடியோ அண்ட் கலர் லாப்


*206, ஜம்பட்டா வீதி,*
*கொட்டாஞ்சேனை,*
*கொழும்பு - 13*
*T.P: 074-618370*
*supershowvideo@hotmail.com*

SUPER SHOW VIDEO



(C/22592)

*149, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*T.P:2082*


# சிங்கர் சந்தைபடுத்தும் தரமுயர்ந்த சாதனங்களை யாழ்ப்பாணத்திலும் வாங்கலாம்.








இதோ, யாழ் மக்களுக்கு ஒரு
மகிழ்ச்சியான செய்தி!




150 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கிவரும் சிங்கர் நிறுவனத்தினால் வழங்கப்படும் தரமுயர்ந்த வீட்டுப்பாவனை சாதனங்கள் இப்பொழுது உங்கள் காலடிக்கு வந்துள்ளன.





நவீன தொழில்நுட்பத்தின் படைப்புக்களான சிங்கர் தையல் மெஷின்கள், குளிரூட்டிகள், விவசாய நீரிறைக்கும் இயந்திரங்கள், சலவை இயந்திரங்கள், சமையலறை உபகரணங்கள், வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், மின்விசிறிகள், துவிச்சக்கர வண்டிகள் முதலியவற்றை நீங்கள் கீழ்க்காணும் விற்பனை நிலையங்களில் கொள்வனவு செய்யலாம்:



**SINGER HITACHI Whirlpool AKAI**

***SISIL* TEFAL Prestige Welling**





## சிறந்த பயனடைய சிங்கரை நாடுங்கள்!

**ஊஷா ஏஜென்சி**
62/32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**சிங்கர்®**
மாசற்ற மேன்மை

(C/22586)

Advantage-DY&R

## கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம்
### மருதனார்மடம்

நாளை (22.06.2002) சனிக்கிழமை நடைபெறவிருந்த பிலிப் அண்ணன் அபிஷேக ஆராதனை, தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது.

செயலாளர்
ஆச்சிரம பரிபாலன சபை.

(C/22619)

---

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவையின் உயிரியல் வைத்திய தொழில்நுட்பவியலாளர் (மின்னியல்/இலத்திரனியல்) வகுப்பு II பிரிவு 'ஆ' இற்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான

## திறந்த போட்டிப்பரீட்சை-2002

மேற்படி 19-06-2002 ஆம் திகதிய விளம்பரத்தில் இணையத்தள முகவரி என தவறுதலாக மின்னஞ்சல் முகவரி பிரசுரிக்கப்பட்டுள்ளது. சரியான இணைத்தள முகவரி: www.nepc.lk

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு - கிழக்கு மாகாணம்.

(C/22635)

---

## பனை தறித்தல் தண்டனைக்குரிய குற்றம்!

எமது நாட்டின் இயற்கை வளமான பனை வளத்தை அழிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். இயற்கை தந்த அரும்பெரும் செல்வமான இந்த வளத்தைப் பாதுகாப்பது மக்கள் ஒவ்வொருவருடைய தலையாய கடமையாகும்.

452 ஆம் அத்தியாயமான மரங்களைத் தறித்தல் (கட்டுப்பாட்டு, திருத்த) சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் பனையைத் தறித்தல் தண்டனைக்குரிய குற்றம் என 1993ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி வெளியான அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏழைக்கு வாழ்வளிக்கும்
பனையை வெட்டினால்
பிணையும் கிடையாது.

பனம் விதைகளை நாட்டி அழிந்துபோன வளத்தை ஈடுசெய்வோமாக.

**பனை அபிவிருத்திச்சபை**
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 2034

(C/22621)

---

## மரண அறிவித்தல

### கந்தசாமி சோதிரூபன்

(ஆசிரியர், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி)

துன்னாலை மத்தி, கோவிற்கடவையைப் பிறப்பிடமாகவும், கரவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சோதிரூபன் 18.06.2002 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் பூபதியின் அன்புக் கணவரும் பிரியதர்ஷனி, கல்யாணி (மாணவிகள், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கந்தசாமி - சின்னம்மா ஆகியோரின் அருமை மகனும் இராமு நடராசா - வள்ளிப்பிள்ளை (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும் திருமதிகள் நடராசா தங்கம்மா, ஆறுமுகம் வள்ளியம்மை, சிவலிங்கம் யோகம்மா, காலஞ்சென்ற ஈஸ்வரநாதன் உலகநாயகி மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி நவரத்தினம் சிவலிங்கம், அருளானந்தமூர்த்தி (இராமு கடை), விக்னேஸ்வரமூர்த்தி (கனடா), சோமஸ்கந்தமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.06.2002) சனிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் "ஞானவிலா" கரவெட்டி மத்தி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளிற்காக வேரொண்டை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரிய சமூகம் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
இரா.சிவலிங்கம் (சகலன்)
(பொறுப்பதிகாரி பரு.இறங்குதுறை)

(5039)

---

## வணிகர் கழக கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்21

நல்லூர் வணிகர் கழகத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை மறுதினம் 23ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் வர்த்தகர் நலன், பாதுகாப்பு ஊழியர் நலன் தொடர்பாக ஆராயவுள்ளதால் தவறாது இதில் கலந்துகொள்ளுமாறு சகல வர்த்தகர்களும் கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-180)

## நயினாதீவில் மக்கள் வங்கியின் விசேட கருமபீடம்

யாழ்ப்பாணம்,ஜூன்21

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவ காலத்தையொட்டி ஐந்து நாள்கள் ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளையின் விசேட கருமபீடம் ஆலய முன்றிலில் இயங்கி வருகின்றது.

நேற்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 24ஆம் திகதி வரை இக் கருமபீடம் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-180)

## நிறுவுநர் தினம்

அரியாலை,ஜூன்21

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய நிறுவுநர் தினமும் ஆரம்பவகுப்பு மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இன்று நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் திருமதி வி.சிவபாலன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் மேற்படி பாடசாலை முன்னாள் அதிபர் கா. கணேசதாசன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (எ-152-17)

## சமய அறிவுப்போட்டி

வலிகாமம் தெற்கு,ஜூன்21

இணுவில் இந்து சமய வளர்ச்சிச சங்கமும் இணுவில் கந்த சுவாமி கோவில் இளம் தொண்டர் சபையும் இணைந்து நடத்தும் சைவ சமய அறிவுப்போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு ஆகிய நான்கு நிலைகளில் நடைபெறவுள்ள மேற்படி போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெறுபவர்களுக்கு தங்கப்பதக்கம் பரிசாக வழங்கப்படும். ஒவ்வொருதரத்திலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகளும், தராதரப் பத்திரங்களும் வழங்கப்படும். (எ-152)

## பளையில் மருத்துவமுகாம்

தென்மராட்சி,ஜூன்21

பளைப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் நலன்கருதி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிப் பிரிவினர் வாராந்தம் நடமாடும் மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்றை பளையில் நடத்தவுள்ளனர்.

நோயாளர்களின் தொகைக்கேற்ப மேற்படி முகாமை வாரத்தில் இரண்டு அல்லது மூன்று தினங்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

பளைப் பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்த அனர்த்தத்தின் போது பளை அரசினர் ஆஸ்பத்திரியும், பிரசவ விடுதியும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

---

**படிவம் விற்பனைக்கு**

உயிரியல் வைத்திய தொழில்நுட்பவியலாளர் ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை விண்ணப்பப்படிவம் விற்பனையாகிறது.

விண்ணப்ப முடிவுதிகதி: 21.06.2002.
பாரதி பதிப்பகம்,
யாழ்ப்பாணம்.

(C/22618)

---

**வாடகைக்கு கொடுக்கப்படும்**

ஸ்ரான்லி வீதியில் 77 அடி நீளம், 32 அடி அகலமான கடை வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-
**குமாரன் ரூறிஸ் இன்**
67, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(5044)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05 - 12 - 1927 | 02 - 07 - 2001 |

### அமரர் சின்னத்துரை இராசேந்திரம்

*அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் பெட்டகமாய்*
*பண்பின் உறைவிடமாய் பாரில் வாழ்ந்திருந்தீர்*
*இன்று உங்களை நினைவு கூருகின்றோம்*
*மறக்க முடியவில்லையே உமது திருமுகத்தை.*

யூனியன் வளவு,
பத்தமேனி,
அச்சுவேலி.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(5041)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 06 - 04 - 1930 | 22 - 06 - 2000 |

### அமரர் வைத்திய கலாநிதி ஜி.ஜோர்ஜ்

(D.A.M., R.I.M.P., J.P., கபிரியேல் வைத்தியசாலை, சுன்னாகம்)

"இறைவா என்னை காத்தருளும் -
உம்மிடம் நான் அடைக்கலம் புகுவேன் -"
(தி.பா. 16:1)

இவரது ஆன்மா இளைப்பாற்றுத் திருப்பலி சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை (22.06.2002) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும். இதில் கலந்துகொண்டு இவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். திருப்பலி முடிந்ததும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் பங்குபற்றிச் செல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

*(தனிப்பட்ட அழைப்பு இல்லை)*

*Dr.சுப்பிரமணியம் வீதி,*
*மரியவாசம்,*
*சுன்னாகம்.*

(5043)

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 - 10 - 1934 | 14 - 06 - 2001 |

அல்வாய் வடக்கு
அமரர் டாக்டர் பொன். சின்னத்துரை
அவர்களின் அன்பு மனைவி

### திருமதி இராசமணி

**திதி: 21-06-2002**

எங்கள் அன்பின் திருவுருவாய் விளங்கிய
எங்கள் தெய்வமே! குடும்ப குலவிளக்கே
எம்மை விட்டகன்ற ஓராண்டு நிறைவுதனில்
எல்லையற்ற துன்பச் சுமையோடு நகர்ந்த
துயர்நிறை நாள்களை எண்ணிப் பார்க்கின்றோம்
உங்கள் நினைவே என்றும் எம் வாழ்வாகட்டும்.

*மகன்:* சி.பிரதீபன்
*சகோதரன்:* கி.சிவக்கொழுந்து குடும்பத்தினர்.

ஆலங்கட்டை,
அல்வாய் வடக்கு.

(C/22620)

## ஒலரா ஒட்டுணு இலங்கை வருவார்

கொழும்பு,ஜூன்21

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் தொடர்பாளர் ஒலரா ஒட்டுணு அடுத்த மாதம் இலங்கை வரவுள்ளார்.

இலங்கையில் சிறுவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி அவர் விரிவாக ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-8)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்21

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கம் வடமராட்சிக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்திவரும் "ரொப்ரென்" (Topten) உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:

- பி.ப.4 மணி - மனோகரா வி.க. எதிர் றேஞ்சர் வி.க.
- பி.ப. 5 மணி - டயமன்ஸ் வி.க. எதிர் பருத்தித்துறை ஐக்கிய வி.க.

(ஐ-ரி)

★ ★ ★

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தினரால் நடத்தப்பட்டுவரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 4.30மணிக்கு கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் உரும்பிராய் வைத்தீஸ்வரா வி.கழகமும், இணுவில் அண்ணா வி.கழகமும் பங்குபற்றுகின்றன. (ஐ-ரி-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்21

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் 19 வயதுப் பிரிவிற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்றும், நாளையும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் பங்குபற்றுகின்றன.

(ஐ-ரி-86)


## CCI CAREER.COM INSTITUTE

உயர்தொழில்சார் முகாமைத்துவ கணக்கியல் கற்கைநெறிகள்
aat CMA CHARTERED IAB விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.
*aat December Exam எடுக்கும் மாணவர்களுக்கான விரிவுரைகள்*

காலம் : நாளை (22.06.2002) சனிக்கிழமை மு.ப. 11மணிக்கு ஆரம்பம்.
இடம் : இல. 79, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (யாகப்பர் ஆலயம் முன்பாக)
அலுவலக நேரம் தினமும் 10 a.m. - 3 p.m.
குறிப்பு : 28.06.2002இற்குப் பின்னர் AATஇற்கான அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
(5049) - நிர்வாகி.


## இவரைக் காணவில்லை



**திரு. திருநாவுக்கரசு ஆறுமுகம் (செல்வம்)**
(வயது - 73)

கடந்த 19.06.2002 புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியில் இருந்து இவரைக் காணவில்லை. இவர் கடைசியாக நீலநிற சேட்டும், நீலநிற சாரமும் அணிந்து சைக்கிளுடன் யாழ். கச்சேரியடிக்கு சென்றிருந்தார். இவரைக் கண்டவர்கள் தயவுசெய்து கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்திலோ அல்லது தொலைபேசி இல. 2448 இற்குத் தொடர்புகொள்ளவும்.

தகவல்:
தி.இரட்ணஜோதி (சகோதரி)
*இல. 62, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.* (5050)


## வாழ்த்துகின்றோம்

யூனியன் கல்லூரியில் 18 வருடங்களுக்கும் மேலாக ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக சேவையாற்றி யூனியன் கல்லூரியின் வளர்ச்சியின் பெரிய பங்கினை வகித்து இளைப்பாறிய

**உயர்திரு.வே.வில்லவராஜா**

அவர்களை மனதார வாழ்த்தி அவ்ரும், அவர் குடும்பத்தினரும் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

மேலும் 19வயதின் கீழ் வலைப்பந்தாட்ட, உதைபந்தாட்ட அணிகள் மாவட்ட மட்டப் போட்டியில் முதலாம் இடத்தையும், 19வயதின் கீழ் கரப்பந்தாட்ட அணியினர் 2ஆம் இடத்தையும் பெற்று மாகாணமட்ட போட்டிக்குச் செல்வதையிட்டு அவர்களையும் பயிற்றுநர், பொறுப்பாசிரியர்கள், அதிபர் ஆகியோரையும் வாழ்த்துகின்றோம்.

26.06.2002 அன்று நடைபெறும் பாராட்டு விழாவில் இவர்களைக் கௌரவிப்பதில் யூனியன் கல்லூரி பழைய மாணவர்கள் பெருமிதம் அடைகின்றனர்.

*குறிப்பு:* பாராட்டு விழாவில் கலந்துகொள்ள விரும்பும் பழைய மாணவர்கள் 25.06.2002இற்கு முன்பாக ஆசிரியர் திரு.சோ.இராமநாதன் அவர்களுடன் யூனியன் கல்லூரியில் தொடர்புகொள்ளவும்.

பழைய மாணவர் சங்கம்
யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.
(C/22638)



## விக்னா கல்வி நிறுவனம்
2004 கலைப்பிரிவு
புதிய பிரிவு சனி, ஞாயிறு 7.00

| | | |
|---|---|---|
| Eco. | - திரு.விக்கி | |
| Log. | - திரு.சயந்தன் | |
| Tam. | - திரு.குழந்தை | 7 மணி |
| | திரு.லிங்கம் | 10மணி |
| H/C. | - திரு.பத்மராஜா | |
| Geo. | - திரு.பாபு | |
| Hist. | - திரு.சுதன் | |
| P/Sci. | - திரு.றொபின்சன் | |
| Chri. | - திரு.வசந்தன் | |
| Dram. | - திரு. மதி | |
| Eng. | - திரு.ஜெயக்குமார் | (5055) |


## வரலாற்றுக் கழக கருத்தரங்குத் தொடர் - 02

தலைப்பு:- "இந்திய இலங்கை உறவுகள்" - [illegible] நோக்கு
வழங்குபவர்:
பேராசிரியர் சி.பத்மநாதன்
*வரலாற்றுத்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.*
காலம் : இன்று (21.06.2002) வெள்ளி பி.ப.3மணி
இடம் : புவியியற்றுறை விரிவுரை மண்டபம்
*ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.*
வரலாற்றுக் கழகம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(5047)


## தேவை

பேக்கறி வேலையில் அனுபவம் உள்ளவர்கள் உடன் நேரில் வரவும்.
றொலெக்ஸ் பேக்மாட்
118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (5052)



## நிறஞ்சனாஸ் சங்கானை

ஸ்ரீகாந்த், பூமிகா, ரகுவரன், விவேக் நடித்த
**ரோஜாக்கூட்டம்** (நீலஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.) (C-22539)

## ராஜா யாழ்ப்பாணம்.

குணால், மோனல் மற்றும் பலர் நடித்த
**பேசாத கண்ணும் பேசுமே...**
காட்சிகள்: தினசரி 10.30, 2.30, 5.30
சனி, ஞாயிறு 10.30, 2.30, 5.30
(C/22538)

## நாகம்ஸ் சுன்னாகம்

இன்று மட்டும்
அருண்குமார், சுமிதா நடித்த
**பாண்டவர் பூமி** (நீலஸ்)
காட்சிகள்: 11.00,3.00 (புதிய நேரம்)
நாளை முதல்
**சந்தித்தவேளை**
(5046)


## உ
## புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை தேவஸ்தானம்
## வேட்டைத் திருவிழா விஞ்ஞாபனம்

இன்று (21.06.2002) வெள்ளிக்கிழமை பி.ப. 4.30 மணியளவில் பூஜை ஆராதனைகளின் பின் வேட்டைத் திருவிழா நடைபெற ஐங்கரன் அருள்பாலித்துள்ளார்.

**விசேட நிகழ்ச்சிகள்**

இன்று (21.06.2002) வெள்ளி காலை 8.30 மணி *தெய்வீகப் பேருரை*

வழங்குபவர்: செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள்

நாதஸ்வரக் கச்சேரி: பொன் தவராசா குழுவினர்
புன்னாலைக்கட்டுவன்
(தேவஸ்தான நாதஸ்வரக் கலைஞர்)

விஷேட நாதஸ்வரக் கச்சேரி: திரு.உதயநாதன் குழுவினர் (இணுவில்) (காலை - இரவு)

*ஐங்கரன் அடியவர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.*

இரகுநாதன் குடும்பத்தினர்,
8ஆம் திருவிழா உபயகாரர்.
(5053)


## மீண்டும் சாவகச்சேரியில்...!

**மகேஸ் அன் சன்ஸ்**

இன்று (21.06.2002) வெள்ளிக்கிழமை தொடக்கம்
மங்களகரமாக மீண்டும் திறந்து வைக்கப்படுகின்றது.
எம்மிடம் ✷ மின்சார உபகரணங்கள்
✷ மிதிவண்டி ✷ மிதிவண்டி உதிரிப்பாகங்கள்
*மற்றும்* ✷ S.Lon பைப் வகைகள்
அனைத்தையும் நியாயவிலையில்
நிறைந்த தரத்துடன் பெற்றுக்கொள்ள!

மகேஸ் அன் சன்ஸ் இல. 3, மொடல் மார்க்கற், சாவகச்சேரி.
(C/22637)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவஞானம் ஆனந்தராசு
(காரைநகர்)

காரைநகர், முதலாம் கட்டையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானம் ஆனந்தராசு அவர்கள் நேற்று (20.06.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு தம்பதியினரின் அன்பு மகளும் வேலுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஆனந்தராசுவின் (முன்னாள் O.A., வீடமைப்பு திணைக்களம், யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் ஜீவமணி, புனிதவதி, ஸ்ரீகரன் (சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்), மனோகரன் (ஆஸ்திரேலியா), தவராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவலிங்கம் (ஒட்டுசுட்டான்), சோதிநாதன் ([illegible] மாநகர சபை), செல்வகுமாரி, சண்முகராசா ([illegible]) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சிவகலா (தீவக கல்வித் திணைக்களம்), சாயிபவன், சிவகலா, பரணிதரன், தருசன், விஜிதரன், கோபிதன், குமரன், கணேசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2002) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ.ஸ்ரீகரன் (மகன்),
சி.சிவலிங்கம் (மருமகன்).
*இல. 90, சம்பியன் லேன், கொக்குவில்.* (5058)

## திருமதி A.R.வினாசித்தம்பி இராசம்மா
(களபூமி, காரைநகர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் காரைநகர், நந்தாவில், களபூமியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்துவருமான திருமதி வினாசித்தம்பி இராசம்மா 18.06.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற A.R.வினாசித்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற A.R.[illegible]பிள்ளையின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற சங்கரலிங்கம், இராசலிங்கம் (ஜேர்மனி), யோகலிங்கம் (யாழ்ப்பாணம்), விமலாதேவி (ஜேர்மனி), [illegible]லிங்கம், சிகாமணிதேவி, தியாகலிங்கம் (ஜேர்மனி), சறோஜினிதேவி (ஜேர்மனி), சந்திராதேவி (ஜேர்மனி) ஆகியோரது பாசமிகு தாயாரும் இராசமணி (ஜேர்மனி), சாரதாதேவி, கைலைநாதன் (ஜேர்மனி), தேவராசன் (சிறிமுருகன் தொலைத்தொடர்பு உரிமையாளர், யாழ்ப்பாணம், காரைநகர்), ஜெயாமணிதேவி (ஜேர்மனி), ஸ்ரீரஞ்சினி (ஜேர்மனி), கேதீஸ்வரநாதன் (ஜேர்மனி), ஆறுமுகநாதன் (ஜேர்மனி) ஆகியோரது அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக இன்று (21.06.2002) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
V.யோகலிங்கம் (மகன்).
*47, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம்.* (C/22639)

## திருமதி சரஸ்வதி கனகராயர்

செருக்கப்புலம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சங்கடந்தனை, தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி சரஸ்வதி கனகராயர் நேற்று (20.06.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை கனகராயரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (பட்டாளம்) - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் வனஜா, சங்கரப்பிள்ளை (ஆஸ்திரேலியா), பத்மஜா (ஆசிரியர், மகாஜனக் கல்லூரி), பங்கஜா (லண்டன்), கதிர்காமசேகரம் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகராசா, றோஸ்மலர், லோகநாதன், ஸ்ரீஸ்கந்தநாதன், ஓசலி ஆகியோரின் அன்பு மாமியாரும் சங்கீரணி, அரவிந், கிருசாந், பவதாரணி, அஸ்வினி, அர்சுனா, கசூனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
*உடுவில் மேற்கு, சுன்னாகம்.* (5059)

# அமரர் சிவசிதம்பரத்துக்கு நாடாளுமன்றில் புகழஞ்சலி

கொழும்பு,ஜூன்21

கூட்டணித் தலைவர் அமரர் மு. சிவசிதம்பரத்துக்கு நாடாளுமன்றத்தில் நேற்று அனுதாபம் தெரிவிக்கப் பட்டது. ஆளும் கட்சியினரும் எதிர்க கட்சியினரும் ஒரே குரலில் அமரர் சிவசிதம்பரத்துக்கு புகழ்மாலைகள் சூட்டினர்.

அரசாங்கத்தின் சார்பில் சபை முதல்வரும் நீதி அமைச்சருமான டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார அனுதாபப் பிரேரணையைச் சபையில் முன்மொழிந்து உரையாற்றினார். தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றினார்.

"தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தனிநாடுதான் ஒரேயொரு தீர்வு அல்ல. ஐ.தே.கட்சி கடந்த காலங்களிலும் தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

"தமிழ்மக்களின் உரிமைகள் பற்றி ஆட்சிப்பீடம் ஏறிய அரசாங்கங்கள் ஆராய்ந்து தீர்வு கண்டிருந்தால் இன்று இவ்வாறு ஒரு ஆயுதப்போராட்டம் உரு வெடுத்திருக்காது. இதை நாம் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

"விடுதலைப் புலிகளுடன் அரசு நிச்சயம் பேச்சு நடத்தும். அதற்கு முன் புரிந்துணர்வு ஒப்பந்தம் முற்றாக அமுல்படுத்தப்படும்."

- இவ்வாறு பிரதமர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, அமரர் சிவசிதம்பரத்தின் சிறந்த அரசியல் ஞானத்தையும் சட்ட மேதாவித்தனத்தையும் சிறிமா பண்டாரநாயக்காவின் குடியுரிமை பறிக்கப் பட்டபோது அவருக்காக வாதாடிய நேர்மையையும் பாராட்டினார்.

தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த திருகோணமலை எம்.பி. இரா. சம்பந்தன் பேசும்போது, தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகவும் தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து கிடைக்கவேண்டும் என்பதற்காகவும் சிவசிதம்பரம் தன்னைத் தியாகம் செய்தவர் என்றார்.

புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் பேசும்போது, பண்டாரநாயக்கா தனிச்சிங்களச் சட்டத்தை அமுல்செய்து, யாழ்ப்பாணத்திற்கு சிங்கள அதிகாரிகளை அனுப்ப நடவடிக்கை எடுத்தபோதே இரு துருவங்களாக இருந்த தமிழரசுக் கட்சியும், தமிழ்க் காங்கிரஸும் ஒன்றுபடும் நிலை ஏற்பட்டது. அவற்றின் இணைப்புக்கு அடித்தளம் அமைத்தவர் அமரர் சிவசிதம்பரம்தான் என்று குறிப்பிட்டார். (ஐ)

## கண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கலில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏ-9 வீதியின் ஒரு பகுதி புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வன்னியை ஊடறுத்துச் செல்கிறது. வடக்கிற்கும ஏனைய பகுதிகளுக்குமான படையினரின் போக்குவரத்துகளை இந்த வீதி ஊடாக மேற்கொள்வது சிரமங்களைக் குறைக்கும் என்பது படைத்தரப்பின் கருத்து.

ஏ-9 வீதியை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு புலிகளின் அனுமதியை அரசு விரைவில் பெற்றுக்கொள்ள இருக்கிறது என்று அரசு சார்பு இணையச் செய்தித்தளம் ஒன்று தெரிவித்திருக்கிறது.

ஏ-9 வீதியை படையினர் எவ்வாறு பயன்படுத்துவர் என்ற விவரங்கள் அடங்கிய திட்டம் ஒன்றை வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழு ஊடாக அரசு இன்னும் சில தினங்களில் சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சமாதான நடவடிக்கைகளுக்கான அரச செயலணிக்குழுவினர் நேற்று முன்தினம் வன்னியில் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுக்களின் போதும் இந்த விடயம் குறித்து பிரஸ்தாபிக்கப் பட்டது.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய படையினர் கண்டி வீதியை போக்குவரத்துக்குப் பயன்படுத்துவதைப் புலிகள் ஆட்சேபிக்கப்போவதில்லை என்று புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## 4 படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(11சி.எல்.எவ்.பிரிவில் கடமையாற்றியவர், அடையாள அட்டை இல. 312724) என்பவருடையது என்று அடையாளம் காணப்பட்டது.

இரண்டாவது எலும்புக்கூட்டின் மேலங்கியில் காணப்பட்ட இலக்கத்தின் மூலம் அது லான்ஸ் கோப்ரல் அஜித்குமார (இலக்கம் எஸ்.306212, எல்.சி.ஏ.கே.) என்பவருடையதாக இருக்கலாம் என்று இராணுவச் சிப்பாய்கள் தெரிவித்தனர்.

முற்றாக சிதைவடையாத அடையாள அட்டையின் புகைப்படத்தின் மூலம் மூன்றாவது எலும்புக்கூடு அடையாளம் காணப்பட்டது. அது லான்ஸ் கோப்ரல் ஆர்.ஏ.சி.வசந்த (அடையாள அட்டை இல.3043040) என்பவரது எலும்புக்கூடு என்பது உறுதி செய்யபட்டது.

நான்காவது எலும்புக்கூட்டுடன் துடயப் பொருள்கள் காணப்படவில்லை. எனினும் குறித்த தினத்தில் நான்கு இராணுவத்தினர் ஒரே தடவையில் காணாமல் போனதாகக் கூறப்பட்டிருந்ததால் நான்காவது எலும்புக்கூடு நிஸங்க (இலக்கம் எல்.சி.307968, ரி.ஏ.என்.எம்.பி.பி.பி) என்பவருடையதாக இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

நான்கு எலும்புக்கூடுகளையும் தனித்தனியாக பொதிசெய்து யாழ். வைத்தியசாலை பதில் சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்குமாறும் -

பிரேத பரிசோதனை முடிவடைந்த பின்னர் அவற்றை சிப்பாய்களின் உறவினர்களிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்றும் -

யாழ்.பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

எலும்புக்கூடுகள் நான்கும் தனித்தனியாகப் பொதிசெய்யப்பட்டு நேற்று மாலை பொலீஸாரால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டன. (ஐ-6-139)

# கிழக்கில் புலிகள் பகுதிக்கு தொலைபேசி இணைப்புகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப பகுதிகளுக்கு தொலைபேசி இணைப்புக்களை வழங்கும் பணிகளை 'ஸ்ரீ லங்கா ரெலிகொம்' நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

முதலாவது தொலைபேசி இணைப்பு கொக்கட்டிச்சோலையில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

உப தபாலகங்கள் மற்றும் அரச திணைக்களங்களுக்கு விரைவில் இணைப்புக்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்தே விடுவிக்கப்படாத பிரதேசங்களுக்குத் தொலைபேசி இணைப்புகளை வழங்க பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளை -

மட்டக்களப்பு மாவட்டத்தில் கைத் தொலைபேசி வசதிகளை ஏற்படுத்துவதற்கும் சில தனியார் நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. (ஐ-8)

## நேரடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளும் - விடுதலைப் புலிகளும் கலந்துரையாடியுள்ளனர்.

நாம் படிப்படியாகவே பேச்சுக்களை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றோம். சமாதான சூழ்நிலையினால் நாட்டுக்கு எவ்வளவு நன்மைகள் கிடைத்திருக்கின்றன.

பேச்சுக்கள் பற்றிய நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படவேண்டும் அதற்காக எதிர்க்கட்சியிலிருந்தும் - ஆளும் கட்சியிலிருந்தும் குழு ஒன்று நியமிக்கப்படும். நிகழ்ச்சிநிரல் தயாரிக்கப் படும்போது அந்தக் குழுவின் சிபாரிசுகள் கவனத்தில் எடுக்கப்படும். ஆயினும் அரசே நிகழ்ச்சிநிரலைத் தயாரிக்கும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள விடயங்களை முற்றுமுழுதாக நிறைவேற்றுவதில் உள்ள தாமதங்கள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதன்கிழமை உயர்மட்ட மாநாடு ஒன்றை நடத்தினார். பல அமைச்சர்கள், அமைச்சரவைச் செயலாளர்கள், முப்படைத் தளபதிகள் ஆகியோருடன் அவர் பேச்சு நடத்தினார். இன்னமும் நிறைவேற்றப்படாத விடயங்களை உடனடியாக நிறைவேற்றவும் பிரதமர் உத்தரவிட்டார்.

- இவ்வாறு அவர் சொன்னார். (ஐ-10-9)

## விமானத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொட்டாஞ்சேனையில் வசிக்கும் ஒருவரின் பெயருக்கே விமானப் பாகங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆனால் வேறு சிலரே அவற்றைத் துறைமுகத்தில் இருந்து வெளியே எடுத்துச் செல்ல முயன்றனர் என்று தெரிகிறது. (ஐ-10-8)

## உடன்படிக்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு காணப்படும்.

விடுதலைப் புலிகளுடன் எப்போது பேச்சு ஆரம்பமாகும் என உறுதியாகக் கூறமுடியாது. எனினும் பேச்சுக்கள் நிச்சயம் இடம்பெறும். அதில் எந்தவித மாற்றமும் இல்லை - என்றார் பிரதமர். (ஐ-3-10)

## மடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதம் தெரிவித்துள்ளனர் என அங்கு சமுகம் தந்த மன்னார் ஆயர் அதிவண ராயப்பு யோசப் தெரிவித்தார்.

உற்சவத்தை ஒட்டி நாளைமுதல் அடுத்த மாதம் 4 ஆம் திகதி வரையும் -

ஜுலை 5 ஆம் திகதிமுதல் 19. ஆம் திகதி வரையும் -

பாதை திறக்கப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## சிறுவர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று ஒரு வருடகாலப் பகுதிக்குள் மீட்கப்பட்டவர்களாவர். மேலும் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக தகவல் வங்கி ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக 'யுனிசெவ்' அமைப்பின் கொழும்பு அலுவலக தகவல் அதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ-10-8)


BEACON
யாழ்நகர்.
DEGREE
B.A.PART-1
மெய்யியல்
ஆசிரியர்:S.S.மனோகரன்
காலம்: சனி, ஞாயிறு 1 - 2ப.நே.
வகுப்புகள் நடைபெறுகின்றன.
(5031)

O - REX பல் கட்டுமிடம்
(பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி)
I பல் கட்டுதல் (யப்பான் சங்கு பல்)
II மிதப்புப் பற்களுக்கு கிளிப் போடுதல் (இலகு நுட்ப முறை)
III உடைந்த பற்கள் ஒட்டுதல்
ஆகிய சேவைகள் தலைமுறை தலைமுறையாக பல் கட்டுதலில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற டாக்டரால் மேற்கொள்ளப்படுகின்றன.
- நிர்வாகம்.
(5038)

பௌதிகவியல்
வினா - விடை வகுப்பு
ஆரம்பம்:22.06.2002சனி 2 மணி
இடம்: 49, இராஜ வீதி, கல்வியங்காடு, நல்லூர்.
1972 இலிருந்து 2002 வரையான வினாத்தாள்கள் யோகானந்தாவினால் விவாதிக்கப்படும்.
(5023)

கல்வி நிறுவனம்
A/L 2003
கணக்கீடு
பாலவாசன் (B.B.A.)
ஒப்படைக்கணக்கு
சனி, ஞாயிறு 7 - 8 a.m.
ஆரம்பம்: 22.06.2002
ஞாயிற்றுக்கிழமை 7 மணி
(5057)

AutoCAD
புதிய பிரிவு ஆரம்பம்
நாள்: 22.06.2002
மேற்படி கணனிக் கற்கைநெறி காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இது பொறியியல்துறை சார்ந்தவர்களுக்கும் - பொறியியல்பீட மாணவர்களுக்கும் என விசேடமாக ஆரம்பிக்கப்படுகிறது.
- இயக்குநர், IIS, யாழ்ப்பாணம்.
(C-22579)


## மரண அறிவித்தல்கள்

### கனகசுந்தரம் பாலகிருஷ்ணன்

(இரசாயன பகுப்பாய்வாளர் (Chemist) - காங்கேசன்துறை, புத்தளம் சீமெந்துக் கூட்டுத்தாபனம் - தலைவர், செஞ்சிலுவைச் சங்கம், வலி. வடக்கு)

தொல்புரம், சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் பாலகிருஷ்ணன் அவர்கள் 19.06.2002 புதன்கிழமை இரவு கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கனகசுந்தரம் அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கருகம்பனை Dr.பொன்னம்பலம் (மலாயன் பென்சனியர்) - தங்கம்மா ஆகியோருடைய மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தேவதாசன் (உப-அதிபர்) மற்றும் திலகஞானம் (UK) ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற இராஜேஸ்வரன் (பிரதிப் பொலீஸ் மா அதிபர்) மற்றும் இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, புவனேஸ்வரி, இராஜேந்திரம் (ஆஸ்திரேலியா), அருளம்பலம் (UK), இளையதம்பி (UK), கமலாதேவி, கமலாம்பிகை, நகுலேஸ்வரி (UK), நகுலேஸ்வரன் (UK) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளைமறுதினம் (23.06.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் இறுதிக்கிரியைகளைத் தொடர்ந்து காலை 10.00 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 32A, Inner Fairline Road,*
*Dehiwala.*
*Tel - 730020*

தகவல்:
திருமதி பாலகிருஷ்ணன்
(மனைவி)

(C/22642)

### விசுவலிங்கம் பொன்னம்பலம்

தாவடி வடக்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் பொன்னம்பலம் அவர்கள் நேற்று (20.06.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் கனகரத்தினம் காலஞ்சென்ற செல்வரத்தினம் ஆகியோரது பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2002) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி வீதி,*
*தாவடி வடக்கு, கொக்குவில்.*

தகவல்:
மகன்.

(C/22643)



PC PARADISE

வடக்கின் ஒரு மாபெரும் கணனிச் சந்தை
இன்று முதல் உங்கள் சேவையில்
உங்களுக்காக எங்களின் சேவைகள்
- கணனி, கணனி உதிரிப்பாகங்கள் விற்பனை
- கணனி, கணனி உதிரிப்பாகங்களை பராமரித்தல், பழுதுபார்த்தல்
- கணனி வலைப்பின்னல்களை (Computer networking) அமைத்துக்கொடுத்தல்
- தகவல் தொழில்நுட்பத்துறையில் ஆலோசனைகளை வழங்கல்
- ஒப்பந்த அடிப்படையில் அரச, தனியார் நிறுவனங்களின் கணனிகளை பழுதுபார்த்தல், பராமரித்தல்
*உங்கள் அனைத்து கணனித் தேவைகளுக்கும் ஒரு முழுமையான தீர்வினைப் பெற்றுக்கொள்ள*
PC Paradise
இல. 61, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(C/22643)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.